இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 58 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 20 – சனிக்கிழமை 07 அக்டோபர் 2023 – சென்னை 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 58: Thiruvalluvar Year - 2054 - Purattasi 20 - Saturday 07 October 2023 - Chennai 12 Pages ₹ 5.00



## தமிழ் மொழி – தமிழினம் – தமிழ் நாட்டுக்கும் – இந்தியா முழுமைக்கும்

# சமூக நீதியைக் காக்க எனது வாழ்க்கையை முழுமையாக ஒப்படைக்கிறேன்!

### “சமூக நீதிக்கான சரித்திர நாயகர் மு.க.ஸ்டாலின்!”



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று (6.10.2023) தஞ்சாவூர், முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி அரங்கில் திராவிடர் கழகத்தின் சார்பில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் "சமூகநீதிக்கான சரித்திர நாயகர் பட்டத்தை வழங்கி சிறப்பித்தார். இவ்விழாவில், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ. ராசா, எஸ்.எஸ். பழனிமாணிக்கம், எஸ். கல்யாணசுந்தரம், செ. இராமலிங்கம், தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், அரசு தலைமைக் கொறடா கோவி. செழியன், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை. சந்திரசேகரன், டி.கே.ஜி. நீலமேகம், நா. அசோக்குமார், பூண்டி கலைவாணன், கா. அண்ணாதுரை, நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ. மதிவாணன், சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஜி.எம். அக்பர் அலி, மேற்கு வங்க மாநில முன்னாள் தலைமைச் செயலாளர் ஜி. பாலச்சந்திரன், தஞ்சை மாநகராட்சி மேயர் சண். இராமநாதன், துணை மேயர் டாக்டர் அஞ்சுகம்பூபதி, திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், சமூகநீதிக் கண்காணிப்புக் குழு தலைவர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன், தவத்திரு பாலபிரஜாபதி அடிகளார், திராவிடர் கழக செயலவைத் தலைவர் அறிவுக்கரசு, பொதுச் செயலாளர் வீ. அன்புராஜ் மற்றும் திராவிடர் கழகத்தின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தஞ்சையில் திராவிடர் கழகம் நடத்திய பாராட்டு விழாவில் “தாய் வீட்டில் கலைஞர்” நூலினை வெளியிட்டு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் உணர்ச்சிமிகு உரை!

தஞ்சை,அக்.7–

**தி.க.வும் தி.மு.க.வும் உயிரும் உணர்வும் போல! உயிரும் உணர்வும் இணைந்து உடல் இயங்குவது போல இந்த இனத்தின் உயர்வுக்காகத் தொடர்ந்து பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம்! என்றும், தமிழ் மொழி தமிழினம் தமிழ்நாட்டைக் காக்க இந்தியா முழுமைக்கும் சமூகநீதியைக் காக்க எனது வாழ்க்கையை முழுமையாக ஒப்படைத்துக் கொள்கிறேன்! எனவும் தஞ்சையில் நடைபெற்ற பாராட்டு விழாவில் கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

தஞ்சாவூரில் திராவிடர் கழகத்தின் சார்பில் நேற்று (06–10–2023) மாலை நடைபெற்ற ‘முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா – சமூகநீதிக்கான சரித்திர நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் மானமிகு மு.க. ஸ்டாலின் அவர்களுக்குப் பாராட்டு விழா’வில் கலந்து கொண்டு, திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் தொகுத்துள்ள “தாய் வீட்டில் கலைஞர்” நூலினை வெளியிட்டு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஏற்புரை ஆற்றினார்.

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய ஏற்புரை வருமாறு:

“பாராட்டிப் போற்றி வந்த பழமைலோகம், ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுது பார்” என்று தந்தை பெரியார் அவர்களைப் பற்றி தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி இருந்தார்கள்.

அந்த உரிமைக்குரிய அத்தகைய பகுத்தறிவுப் பகலவன் நம்முடைய தந்தை பெரியார் அவர்களின் திராவிடர் கழகம்தான், தலைவர் கலைஞருக்கு தாய் வீடு – என்ற புத்தகத்தை வெளியிடும் நிகழ்ச்சி இங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**தலைவர் கலைஞருக்கு மட்டுமல்ல; எனக்கும் தாய்வீடு திராவிடர் கழகம்!**

தலைவர் கலைஞருக்கு தாய் வீடு – இது மிகமிக பொருத்தமான தலைப்பு. தலைவர் கலைஞருக்கு மட்டுமல்ல; எனக்கும் திராவிடர் கழகம்தான் தாய்வீடு.

‘தாய்வீட்டில் கலைஞர்’ என்ற நூலை வெளியிடுவதற்காக மட்டுமல்ல; ‘நானும் என் வீட்டுக்குச் செல்கிறேன்’ என்ற உணர்வோடுதான் இந்த மேடைக்கு வந்திருக்கிறேன்.

**என்னை என்றும் காப்பவர்; காத்தவர் அய்யா ஆசிரியர்!**

அதிலும் குறிப்பாக, திராவிடர் கழகத் தலைவர் அய்யா ஆசிரியர் அவர்கள் அழைத்தால், எங்கும், எப்போதும், எந்த நேரத்திலும் செல்வேன். காரணம், என்னைக் காத்தவர் – இன்றைக்கும் காத்துக் கொண்டிருப்பவர். அதிலும் குறிப்பாக, மிசா காலத்தில், அந்த இருட்டறையில் எனக்கு தைரியம் கொடுத்தவர்தான் அய்யா ஆசிரியர் அவர்கள்.

‘தந்தை பெரியார் அவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்களும் இல்லாத இந்த நேரத்தில் எனக்கு ஆறுதலாக இருப்பவர் ஆசிரியர் வீரமணிதான்’ என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார்கள். என்னைப் பொறுத்தவரையில் இவர்களோடு, தலைவர் கலைஞர் அவர்களும் இல்லாத நேரத்தில் எனக்கு கொள்கை வழிகாட்டியாக இருப்பவர், அய்யா ஆசிரியர் அவர்கள்தான்!

அதனால்தான், ‘நான் போக வேண்டிய பாதையைத் தீர்மானிப்பது பெரியார் திடல்தான்’ என்பதை நான் குறிப்பிட்டிருக்கிறேன். இதைத்தான் நேற்றும் சொன்னேன்; இன்றும் சொல்கிறேன்; நாளையும் சொல்வேன்!

**தி.க.வும் - தி.மு.க.வும் உயிரும் உணர்வும் போல!**

திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கிய நேரத்தில், பேரறிஞர் அண்ணா அவர்கள், ‘திராவிடர் கழகத்துக்கு போட்டியாக அல்ல. அதே கொள்கையை வேறொரு பாணியில் சொல்வதற்காகத்தான். அந்தக் கொள்கையைச் செயல்படுத்திக் காட்டுவதற்காகத்தான்’ என்று மிக தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். தி.க.வும் தி.மு.க.வும் இரட்டைக் குழல் துப்பாக்கி என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். தி.க.வும் தி.மு.க.வும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் என்று சொன்னார் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்.

**தமிழ்நாடு அனைத்து வகையிலும் முன்னேறிய மாநிலமாக மட்டுமல்ல, தன்னிறைவு பெற்ற மாநிலமாக உயர வேண்டும். இந்திய ஒன்றிய அரசின் ஆட்சிக் கருத்தியலாக, கூட்டாட்சிக் கருத்தியல் மலர வேண்டும். அனைத்து தேசிய இனங்களும் உரிமை பெற்றவைகளாகவும், அனைத்து மாநில மொழிகளும் ஒன்றிய ஆட்சி மொழியாக உயர்ந்து நிற்க வேண்டும். அனைவர் குரலுக்கும் ஒரே மரியாதையும் மதிப்பும் இருக்க வேண்டும். இதுதான் இந்திய ஒன்றியமும் அதில் உள்ளடங்கிய தமிழ்நாடும் இயங்க வேண்டிய முறை! அத்தகைய கூட்டாட்சிக் கருத்தியலை உள்ளடக்கிய இந்தியாவை அமைப்பதற்காகவே இந்தியா கூட்டணியை அமைத்துள்ளோம்.**

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்

### தமிழ்நாட்டைப் பின்பற்றி – தெலங்கானாவில் தொடங்கியது!

## அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம்!

*ஐதராபாத், அக். 7-*

*தமிழ்நாடு அரசைப் பின்பற்றி தெலங்கானா மாநிலத்திலும், அரசு பள்ளி மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு மதிய உணவு மட்டுமின்றி, காலையிலும் உணவு வழங்கி கல்வி கற்பிக்கும் விதமாக தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்து அதனை செயல்படுத்தி வருகிறார். இத்திட்டம் நாடு முழுவதும் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.*

*இதையடுத்து தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்ட காலை உணவுத் திட்டத்தை ஆய்வு செய்ய தெலங்கானா அரசு, அதிகாரிகள் அடங்கிய குழுவை அனுப்பி வைத்தது.*

*அந்த ஆய்வின் அடிப்படையில் தெலங்கானா முதல்வர் சந்திரசேகர ராவ், தெலங்கானா மாநிலத்தில் உள்ள பள்ளிகளில் 1ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்க உத்தரவிட்டார். இந்நிலையில் ரெங்கா ரெட்டி மாவட்டத்தில் முதலமைச்சர் சந்திர சேகர ராவ் இத்திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்த திட்டத்தை அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், அதிகாரிகள் பல்வேறு இடங்களில் தொடங்கி வைத்தனர். ரூ.400 கோடி செலவில் செயல்படுத்தும் இத்திட்டத்தால் 28,000 அரசு பள்ளிகளில் பயிலும் 23 லட்சம் மாணவர்கள் பயன் அடைய உள்ளனர்.*

*மாணவர்களுக்கு வழங்கப்படும் மெனுவையும் பள்ளிக் கல்வித் துறை தயாரித்துள்ளது. அதன்படி, திங்கள்கிழமை கோதுமை ரவா உப்புமா மற்றும் சட்னியும், செவ்வாய்க்கிழமை அரிசி ரவா கிச்சடியுடன் சட்னியும் வழங்கப்படவுள்ளது. புதனன்று பம்பாய் ரவா உப்புமா மற்றும் சட்னி, வியாழக்கிழமை ரவா பொங்கல் மற்றும் சாம்பார், வெள்ளிக்கிழமை தினை ரவா கிச்சடியுடன் சாம்பார், சனிக்கிழமை கோதுமை ரவா கிச்சடி மற்றும் சட்னி மாணவர்களுக்கு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.*

*தமிழ்நாடு அரசு கொண்டு வந்துள்ள காலை உணவுத் திட்டம் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.*

### நாயக்கனேரி ஊராட்சித் தலைவர் பதவி; வரலாறு தெரியாமல் உள்நோக்கத்துடன்

# ஆளுநர் ஆர்.என்.ரவி பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர் போல் பேசி வருகிறார்!

### நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அறிக்கை!

**சென்னை, அக். 7-**

**சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவைக்கூடப் படிக்காமல், நாயக்கனேரி ஊராட்சி மன்றத்தின் பட்டியலினத் தலைவர் பதவியேற்பு பற்றி அமைதியைச் சீர்குலைக்கும் விதத்தில் தமிழ்நாட்டில் ஆளுநர் பொறுப்பில் உள்ள ஆர்.என்.ரவி பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ். செய்தித் தொடர்பாளராகப் பரப்புரை செய்வதா?” எனக் கேட்டு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளார்.**

இது தொடர்பாக வெளியிட்டுள்ள அவரது அறிக்கை வருமாறு:-

திருப்பத்தூர் மாவட்டம், நாயக்கனேரி ஊராட்சி மன்றத் தலைவர் பதவியேற்பு குறித்து மாண்பமை உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவைக்கூட அறிந்துகொள்ள முயற்சிக்காமல் தமிழ்நாடு அரசின் மீது ஆளுநர் அவர்கள் திட்டமிட்டு அவதூறுப் பரப்புரையை செய்து வருவது மிகுந்த வேதனைக்குரியது. அரசியல்சட்டப் பதவியில் இருப்பவர் அரசியல் கட்சித் தலைவர் போல், குறிப்பாக பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் செய்தித்தொடர்பாளர் போல் பேசி, தமிழ்நாட்டின் சமூகநீதியால் பிறந்துள்ள அமைதிக்கும் குந்தகம் விளைவித்து வருவது அவர் வகிக்கும் பதவிக்கு அழகல்ல.

தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 12,525 ஊராட்சிகளில் 4,357 இடங்கள் பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. அதில் திருப்பத்தூர் மாவட்டம் நாயக்கனேரி ஊராட்சி மன்றத் தலைவர் பதவி மட்டுமே நீதிமன்றத்தில் உள்ள வழக்கின் காரணமாக அங்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பொறுப்பேற்க இயலாத நிலை இருந்தது.

**நீதிமன்ற வழக்கால் பொறுப்பேற்க இயலவில்லை!**

இந்த நாயக்கனேரி ஊராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான வழக்கில், சென்னை உயர்நீதிமன்றம் தனது 7.10.2021 நாளிட்ட உத்தரவில் “.... The learned Government Counsel submitted that the election is unopposed. Since this Court feels that the place is not meant to the person of this category, we make it clear that she shall not take charge...” (போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அரசுத் தரப்பு வழக்கறிஞர் தெரிவித்துள்ளார். ஒதுக்கப்பட்ட இடத்துக்குரிய பிரிவைச் சேர்ந்தவராக இந்நபர் இல்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிற காரணத்தால் சம்பந்தப்பட்ட நபர் பொறுப்பேற்கக் கூடாது என்று தெளிவாக்குகிறோம்.) எனத் தெரிவிக்கப்பட்டிருந்ததால் ஊராட்சி மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பொறுப்பை ஏற்க இயலாத நிலை ஏற்பட்டது.

திராவிட மாடல் அரசின் சமூகநீதிக் கொள்கை, பா.ஜ.க.வையும், அதன் அமைப்புகளையும் தமிழ் மண்ணுக்குள் செல்வாக்குப் பெற முடியாமல் தடுத்து வைத்திருக்கிறதே என்ற



ஆதங்கம்தான் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இப்படி பேச காரணமே தவிர, பட்டியலினப் பழங்குடியின மக்கள் மீது அவருக்கு இருக்கும் அக்கறை இல்லை.

அப்படி அவருக்கு உண்மையிலேயே அக்கறை இருந்திருந்தால் “அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம்” என்று சட்டம் பிறப்பித்துள்ளதை எதிர்த்து உச்ச நீதிமன்றம் வரை சென்றுள்ளவர்களைக் கடிந்து கொண்டிருக்கலாம். அடிக்கடி டெல்லி செல்லும் அவர், உத்தரபிரதேசத்தில் பட்டியலின மக்களுக்கு எதிரான குற்றங்கள் 31.8 விழுக்காடும், மத்திய பிரதேசத்தில் 63.6 விழுக்காடும் உயர்ந்திருப்பதற்குக் கவலைப்பட்டு குரல் கொடுத்திருக்கலாம். உத்தரபிரதேசத்தில் 13,146, மத்திய பிரதேசத்தில் 7214, குஜராத்தில் 1201 எனப் பட்டியலினத்தவர் கொலை செய்யப்பட்டது குறித்து வெகுண்டெழுந்திருக்கலாம். ஏன்; பழங்குடியினருக்கு எதிராக மத்திய பிரதேசத்தில் 17 விழுக்காடு அளவிற்குக் குற்றங்கள் அதிகரித்திருப்பதைக் கண்டு பதற்றப்பட்டு பேசியிருக்கலாம்.

**யாரை ஏமாற்ற இந்த நாடகம்?**

பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் அதிகரித்து வரும் இத்தகைய கொடுமைகளை எதிர்த்து உள்துறை அமைச்சரிடம் குரல் கொடுக்காத ஆளுநர், உயர்நீதிமன்ற உத்தரவில் உள்ள ஒரு ஊராட்சியை மட்டும் பற்றிப் பேசுவதன் உள்நோக்கம் என்ன? யாரை ஏமாற்ற இந்த நாடகமாடுகிறீர்கள்?

அனைவரும் ஓரிடத்தில் சமத்துவமாய் வாழ சமத்துவபுரங்களை உருவாக்கிய தமிழ்நாடு, சமூகநீதி மண். இங்கு தமிழ்நாடு பட்டியலின பழங்குடியின ஆணையத்தை அமைத்து, மாநில அளவிலான கண்காணிப்புக் கூட்டங்களை நடத்தி பட்டியலின மற்றும் பழங்குடியினத்தவருக்கான சமூகநீதியை நிலைநாட்டி வருகிறார் எங்கள் முதலமைச்சர் அவர்கள்.

**பதிலடி தர மக்கள் தயார்!**

எங்கள் முதலமைச்சர் அவர்கள் உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்த போதுதான் தேர்தலை நடத்த முடியாத ஊராட்சிகளில் தேர்தலை நடத்தி, சமூகநீதியை நிலைநாட்டினார். பட்டியலினப் பழங்குடியினத்தவர் மீதான வன்முறைகளுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகளில் தண்டனை பெறுவது 2013 -2020 வரை 7.15 விழுக்காடாக இருந்த நிலை 2021-2023இல் 9.12 விழுக்காடாக உயர்த்தியுள்ளது இந்த சமூகநீதி அரசுதான்!

இந்த விவரங்களும் வரலாறும் தெரியாமல், ஆளுநர் அவர்கள் சிறப்பாகச் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி வரும் திராவிட மாடல் அரசை தொடர்ந்து விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது. அரசியல் பேச வேண்டும் என்றால் “அரசியல் தலைவராக” தன்னை மாற்றிக் கொண்டு தாராளமாக ஆளுநர் அவர்கள் தன் கருத்தை தெரிவிக்கட்டும். அதற்கு பதிலடி கொடுக்க நாங்கள் மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாடு மக்களுமே தயாராக இருக்கிறார்கள்.

எனவே, ஆளுநர் அவர்கள் உண்மைக்கு மாறான இத்தகைய பேச்சுகளைத் தவிர்த்து, மாநில சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்பும் மசோதாக்களுக்கும், அரசு நிர்வாகத்தின் கோப்புகளிலும், அ.தி.மு.க.வைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்களைக் காப்பாற்ற அவர்கள் தொடர்பான லஞ்ச வழக்குகளில் கையொப்பமிடாமல் வைத்துள்ள (sanction of prosecution) கோப்புகளிலும் கையெழுத்துப் போடுவதில் தனது நேரத்தை உருப்படியாகச் செலவிட்டு, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் ஆக்கபூர்வமாக செயல்படும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 07-10-2023

# ஊடகங்களுக்கு விடப்பட்டுள்ள மிரட்டல்

**சி.**பி.ஐ. - வருமானவரித் துறை - அமலாக்கத் துறை ஆகியவற்றை வைத்து எதிர்க்கட்சிகளை மிரட்டும் ஒன்றிய பா.ஜ.க. அரசு - அடுத்து ஊட கங்களையும் மிரட்டி வருகிறது. 'நியூஸ் கிளிக்' முதன்மை ஆசிரியர் பிரபீர் புர்காயஸ்தாவும், அதன் மனிதவளப் பிரிவின் தலைவர் அமித் சக்ரவர்த்தி யும் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இந்த கைது நடவடிக்கை என்பது ஒட்டு மொத்தமாக ஊடகங்களுக்கு விடப்பட்டுள்ள மிரட்டல் ஆகும்.

பிரபீர் புர்காயஸ்தா - அவசர நிலைக்காலத்தில் ( 1975) 18 மாதங்கள் சிறையில் இருந்த போராளி ஆவார். இடதுசாரிச் சிந்தனை கொண்டவர். அமித் சக்ரவர்த்தி - ஒரு மாற்றுத்திறனாளி. இவர்கள் இருவரும்தான் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.டெல்லியில் உள்ள நியூஸ் கிளிக் இணைய தள செய்தி நிறுவன அலுவலகத்தில் தீவிர சோதனை நடத்தி பூட்டி சீல் வைத்த டெல்லி காவல்துறையினர், இந்த கைது நடவடிக்கையையும் தொடர்ந்துள்ளனர்.

என்ன குற்றச்சாட்டு அடிப்படையில் இந்த நடவடிக்கையைச் செய்துள் ளார்கள் தெரியுமா? அமெரிக்க நாளிதழான 'நியூயார்க் டைம்ஸ்' ஒரு செய்தியை வெளியிடுகிறது. அதில், 'நியூஸ் கிளிக் நிறுவனம், சீனாவிட மிருந்து நிதி பெறுகிறது' என்று குற்றச்சாட்டு சொல்லி இருந்தார்களாம். இதை வைத்து இந்த கைது நடவடிக்கையாம்!

நியூஸ் கிளிக் ஊடக நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "எங்க ளது இணையதளம் சுதந்திரமானது. சீன நிறுவனங்களிடம் இருந்து நிதி பெற்றுக்கொண்டு செய்திகளை வெளியிட்டதாகக் கூறப்படும் புகார்களுக்கு எந்த அடிப்படையும் இல்லை. சீனாவுக்காக பிரச்சாரம் செய்யும் எந்த செய் தியும் எங்கள் இணையதளத்தில் வெளியிடப்பட வில்லை. 2021ஆம் ஆண்டு முதல் நியூஸ் க்ளிக் நிறுவனத்தின் வங்கிக் கணக்குகள், வரவு - செலவுகள், வெளிநாட்டுத் தொடர்புகள் குறித்து ஒன்றிய அரசின் பல்வேறு விசாரணை அமைப்புகள் ஆய்வு நடத்தி உள்ளன. இந்த ஆய்வுகளில் எந்த முறைகேடுகளும் கண்டுபிடிக்கப்படவில்லை.

நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையில் உள்நோக்கத்துடன் வெளியான கட் டுரையை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, எந்த ஆதாரமும் இல்லா மல் 'உபா' போன்ற கடுமையான சட்டங்களின் கீழ் எப்படி வழக்குப் பதிவு செய்ய முடியும்?" என நியூஸ் கிளிக் கேள்வி எழுப்பியுள்ளது.

**"சீன நிறுவனங்களிடம் இருந்து பெருமளவில் நிதி பெற்ற 'பி.எம்.கேர்ஸ்' ஐ நிர்வகிப்பவர் மீது ஏன் ஒரு நடவடிக்கையும் இல்லை?" என உச்சநீதிமன்ற வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் கேள்வி எழுப்பியுள்ளார். "சீனாக்காரர் ஒருவரிடமிருந்து கொஞ்சம் நிதி வந்த ஒரே காரணத்துக்காக, நியூஸ் க்ளிக் மீது தேசத் துரோக வழக்கு. அந்த நிறுவனத்தோடு தொடர்பு கொண்டவர்களின் வீடுகளில் ரெய்டு, அவர்களின் செல்பேசிகளும் லேப்டாப் களும் பறிமுதல். ஆனால் சீன நிறுவனங்களிடமிருந்து பெருமளவில் நிதி பெற்ற PM CARES-ஐ நிர்வகிப்பவர் மீது ஏன் ஒரு நடவடிக்கையும் இல்லை?" என கேள்வி எழுப்பியுள்ளார்.**

2021 ஆம் ஆண்டு இந்த நிறுவனத்தில் அமலாக்கத்துறை சோதனை நடத்தியது. இதன் முதன்மை ஆசிரியர் பிரபீருக்குச் சொந்தமான வீட்டை முடக்கியது. அவரது நிரந்தர வைப்புத் தொகையை முடக்கியது. பெரிதாக ஆதாரம் இல்லாததால், நியூஸ் கிளிக் மற்றும் அதன் உரிமையாளர் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

இதன் தொடர்ச்சியாக இந்த இணைய ஊடகத்தைக் குற்றம் சாட்டி ஒன் றிய அமைச்சரே நாடாளு மன்றத்தில் பேசினார். இதைத் தொடர்ந்து கடந்த அக்டோபர் 3 அன்று சோதனை நடத்தி கைதும் செய்து விட்டார்கள். 'நியூஸ் கிளிக்' ஊடக ஊழியர்கள் அனைவரும் விசாரணைக்கு உள்ளாக் கப்பட்டு இருக்கிறார்கள். மூத்த பத்திரிகையாளர் ஊர்மிளேஷ், விசார ணைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். ராஜ்யசபா டிவியின் முன்னாள் ஆசிரியர் இவர்.

'நியூஸ் கிளிக்' என்பது இடதுசாரிச் சிந்தனை கொண்ட ஊடகம் ஆகும். பா.ஜ.க. அரசின் போலியான முகத்தை தொடர்ந்து அம்பலப்படுத்தி வந் துள்ளது. இதுவரை ஆங்கிலத்தில் செய்திகளை வெளியிட்டு வந்தவர்கள், சமீப காலமாக இந்தியில் செய்திகளை வெளியிடத் தொடங்கி உள்ளார்கள். 'இந்தி' பேசும் மாநிலங்கள் விழிப்புணர்வு பெற்றுவிடக் கூடாது என்பதில் பா.ஜ.க. எப்போதும் தெளிவாக இருக்கும். அந்த மாநில மக்களை இருட் டில் வைத்து, வாக்கு வேட்டையாடும் கட்சி அது. எனவே, 'இந்தி'யில் செய்தி வெளியிடுவதைத் தடுக்க நினைத்துள்ளார்கள்.

**'இந்தியா' கூட்டணி சார்பில் வெளியிடப்பட்டுள்ள கூட்டறிக்கையில், "மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க. அரசு, கடந்த ஒன்பது ஆண்டுக ளில், பிபிசி, நியூஸ் லாண்ட்ரி, டைனிக் பாஸ்கர், பாரத் சமாச்சார், காஷ்மீர் வாலா, தி வயர் போன்ற ஊடகங்களை ஒடுக்க புலனாய்வு அமைப்புகளைப் பயன்படுத்தியது. தற்போது நியூஸ் கிளிக் செய்தி நிறுவனத்தை ஒன்றிய அரசு குறிவைத்துள்ளது. மோடி அரசு ஊடக நிறுவனங்களைக் கையகப்படுத்துவ தன் மூலம் தங்கள் கட்சியின் கருத்தியலுக்கு ஊடகங்களை ஊதுகுழலாக மாற்ற முயற்சிக்கிறது." என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டி உள்ளார்கள்.**

'அழுத்தத்துடன் பணிபுரிகிறோம்' - என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு, டிஜிபப் நியூஸ் இந்தியா ஃபவுண்டேஷன் (Digipub News India Foundation), இந்தியன் வுமன்ஸ் பிரஸ் கார்ப்ஸ் (Indian Women's Press Corps), பிரஸ் கிளப் ஆஃப் இந்தியா (Press Club of India) உள்ளிட்ட பல் வேறு அமைப்புகள் இணைந்து கடிதத்தை எழுதியுள்ளன. "சட்டவிரோதச் செயல்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்ய, பத்திரிகைப் பணி ஒன்றும் தீவிரவாதப் பணி அல்ல. எனவே, பத்திரிகைத்துறைக்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல்களை உச்சநீதிமன்றம் தலையிட்டு தடுக்க வேண்டும்" என அவை வலியுறுத்தி உள்ளன.

"மக்களுக்கு நன்மைகள் எதுவும் செய்ய மாட்டோம், இதை யாராவது குறை சொன்னால் அவர்களை விடவும் மாட்டோம்" - இதுதான் பா.ஜ.க. பாணி ஆட்சி முறையாகும். இவை அனைத்துக்குமான தண்டனையை மக்கள் நிச்சயம் தருவார்கள்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.10.2023) சென்னையில், செயிண்ட் கோபைன் நிறுவனத்தின் தலைவர் பியரி ஆன்ட்ரி டி சேலண்டர் (Mr. PierreAndre de Chalendar), தலைமை செயல் அலுவலர் பெனாய்ட் பாசின் (Mr. Benoit Bazin) உள்ளிட்ட டி செயிண்ட் கோபைன் நிறுவனத்தின் உலகளா விய நிர்வாக இயக்குநர்கள் குழுவினரை சந்தித்து கலந்துரையாடினார். அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன் செயிண்ட் கோபைன் நிறுவனத்தின் உலகளாவிய நிர்வாக இயக்குநர்கள் குழுவினர் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண்ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் வே.விஷ்ணு ஆகியோர் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தஞ்சாவூர் மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக சென்னையிலிருந்து திருச்சிராப்பள்ளி விமான நிலையத்திற்கு நேற்று (06.10.2023) வருகை தந்ததை முன்னிட்டு, விமான நிலையத்தில், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் பொன்னாடை மற்றும் புத்தகம் வழங்கி வரவேற்றனர்.

## தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் மகளிர்
# சுயஉதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் நவராத்திரி விற்பனைக் கண்காட்சி!
## நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் இன்று துவங்குகிறது!

சென்னை, அக்.7-

தமிழ்நாடு மகளிர் மேம் பாட்டு நிறுவனம் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் நவராத்திரி விற்பனைக் கண் காட்சி துவக்க விழா இன்று நடைபெறுகிறது.

முதலமைச்சர் அவர்கள் சுய உதவிக் குழு மகளிரின் வளர்ச்சிக்காக பல்வேறு திட் டங்களை செயல்படுத்தி வரு கிறார். அத்திட்டங்களின் பய னாக இன்று சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு, வருவாய் ஈட்டி, பொருளாதார சுயசார்பு பெற்று வருகின்றனர்.

சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் பொருட்கள் அனைத்துத் தரப்பினரையும் சென்றடையும் வகையிலும், அவர்களின் தயாரிப்புப் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும், மாநில / மாவட்ட / வட்டார அள வில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சிகளை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவ னம் நடத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக நவராத்திரி பண்டிகையை முன்னிட்டு, சென்னை, நுங் கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் தமிழ் நாடு மகளிர் மேம்பாட்டு நிறு வனத்தின் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் நவராத்திரி விற்பனைக் கண்காட்சி, இன்று (07.10.2023) துவங்குகிறது.

07.10.2023 முதல் 20.10.2023 வரை நடைபெறும் இக்கண் காட்சியில், மகளிர் சுய உத விக் குழுக்கள் தங்களின் உற் பத்திப் பொருட்களான பட்டு, பருத்தி ஆடைகள், மண்பாண்டப் பொருட்கள், செயற்கை ஆபரணங்கள், பல் வேறு உலோகங்களால் உற் பத்தி செய்யப்படும் கைவி னைப் பொருட்கள், தரமான வீட்டு உபயோகப் பொருட் கள், சணல், காகிதம், பனை ஓலை மற்றும் வாழை நார் ஆகியவற்றால் தயாரிக்கப் பட்ட பொருட்கள், பல் வேறு தோல் பொருட்கள், நவராத்திரி கொலு பொம்மை கள், வாசனைப் பொருட் கள், மரச் சிற்பங்கள், சுடுமண் சிற் பங்கள், மூலிகைப் பொருட் கள், பாரம்பரிய கிராமிய உணவு வகைகள் உள்ளிட்ட பல்வேறு வகையான பொருட் கள் விற்பனைக்கு வைக்கப்பட் டுள்ளன.

குறிப்பாக அறுசுவை மிகுந்த பாரம்பரிய உணவு களை உண்டு மகிழ்வதற் கென தனி அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளன. இக் கண்காட்சிக்கு அனுமதி இல வசம்.

இத்தகைய சிறப்பு மிக்க விற்பனைக் கண்காட்சியை அனனவரும் கண்டு களித்து மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்த தரமான பொருட்களை வாங்கி பயன டைவதோடு மகளிர் சுய உத விக் குழுக்களின் பொருளா தார முன்னேற்றத்திற்கு உதவிட கேட்டுக் கொள்ளப் படுகிறது.

## கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில்
# குஜராத் மாநில மருத்துவக் குழுவினருடனான கலந்தாய்வுக் கூட்டம்!
## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்றார்!

சென்னை, அக். 7-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலை மையில் நேற்று (06.10.2023), சென்னை, கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில், தமிழ் நாட்டில் உள்ள மருத்துவக் கட்டமைப்பினை பார்வை யிட வந்த குஜராத் மாநில மருத்துவக் குழுவினருட னான கலந்துரையாடல் கூட் டம் நடைபெற்றது. பின்னர் தமிழ்நாடு உணவு பாதுகாப் புத் துறையின் மூலம், திரு வள்ளூர் மற்றும் ஆவடி இர யில் நிலையங்களுக்கு "Eat Right Station" என்ற தரச்சான் றிதழ்கள் வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களி டம் தெரிவித்ததாவது;

### குஜராத் மாநில மருத்துவ அலுவலர்கள்!

குஜராத் மாநில மருத்து வத் துறை அலுவலர்கள் 60 பேர் 03.10.2023 அன்று தமிழ் நாட்டிற்கு வருகை தந்து தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பினை பார்வை யிட வந்துள்ளார்கள். அந்த வகையில் இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, ஓமந்தூரார் அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை, கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை, நந்தி வரம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம், பூந்தமல்லி ஆரம்ப சுகாதார நிலையம், தாம்பரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, போன்ற பல் வேறு மருத்துவமனைகளுக்கு நேரடியாக சென்று நோயா ளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகளை பார்வையிட் டுள்ளனர். தமிழ்நாட்டின் சிறந்த மருத்துவ கட்டமைப் புகளை பாராட்டியுள்ளனர்.

இந்தியாவிலேயே முதன் முறையாக நமது ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன் னோக்கு உயர் சிறப்பு மருத் துவமனையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட, புற்று நோய் சிகிச்சைக்காக ரோபோ டிக் அறுவை சிகிச்சை இயந்தி ரத்தை பார்த்து ஆச்சரியப் பட்டுள்ளனர். அதே போல் கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்தவமனையில் டபுள் பலூன் எண்டோஸ் கோப்பி (Double Balloon Endoscopy) கருவி, எம்.ஆர்.ஐ போன்ற அதிநவீன மருத்துவ கருவிகளை பார்வையிட் டார்கள். தமிழ்நாட்டில் மகப்பேறு மருத்துவம், இரு தய அறுவை சிகிச்சைகள், புற் றுநோய் சிகிச்சைகள் சிறப் பாக செய்யப்படுவதை பாராட்டியுள்ளனர்.

Eat Right Station என்ற சான் றுகள் ஏற்கனவே உணவகங் களுக்கு வழங்கப்பட்டு வருகி றது. கோயில்களில் இருக்கும் உணவு தயாரிப்பு கூடங்களுக்கு இந்த சான்றுகள் வழங்கப்பட் டுள்ளது. தற்போது புதிய முயற் சியாக திருவள்ளூர், ஆவடி ஆகிய இரண்டு இரயில்வே நிலையங்களுக்கு Eat Right Station என்ற சான்றிதழ் வழங் கப்பட்டுள்ளது. தன்னார்வு தொண்டு நிறுவனங்களின் மூலம் திருமண மண்டபங் கள், கூட்டங்களில் சமைக்கப் படும் உபரி உணவுகள் எடுத் துச் செல்லப்பட்டு தேவைப் படுவோர்களுக்கு வழங்கும் திட்டம் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட் டத்தில் பயனாளிகளாக 1,44,82,353 குடும்பங்கள் உள் ளது. புதியதாக 7,70,000 குடும்பங்கள் அன்மையில் கலைஞரின் வருமுன் காப் போம் திட்ட முகாம்கள் மூல மும், புதிய காப்பீட்டுத் திட்ட உறுப்பினர் சேர்க்கை முகாம்கள் மூலமும் சேர்க்கப் பட்டுள்ளனர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, 18.11.2023 அன்று, கலைஞர் நூற்றாண்டினை முன்னிட்டு, தமிழ்நாடு முழுவதும் 100 இடங்களில் ஒரே நாளில் காப்பீட்டு திட்ட அட்டை களை வழங்கும் முகாம்கள் நடத்தப்படும்.

### உடல் உறுப்பு தானம்!

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 23.09.2023 அன்று தமிழ்நாட்டில் உடல் உறுப்பு தானம் செய்பவர்க ளுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று அறிவித்தார்கள். அதன்படி, உடல் உறுப்பு தானம் செய்த வர்களுடைய உடல்களுக்கு அரசின் சார்பில் மரியாதை செலுத்தப்படும் என்று அறி விக்கப்பட்டு, நான் நேரடி யாக தேனி மாவட்டத்தில் உறுப்பு தானம் செய்த ஒருவ ருடைய உடலுக்கு மாவட்ட ஆட்சி நிர்வாகத்தோடு இணைந்து அரசின் சார்பில் மரியாதை செலுத்தினோம். அதேபோல் திருச்சி மாவட் டத்தில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் நேரடியாக அரசின் சார்பில் மரியாதை செலுத்தினார்கள். தற்போது வரை 4 பேருக்கு அரசின் சார்பில் மரியாதை செலுத்தப்பட்டுள்ளது. 23.09.2023 முதல் தற்போது வரை 1,652 பேர் உடல் உறுப்பு தானம் செய்ய பதிவு செய்துள்ளனர்.

### டெங்கு பாதிப்பு

டெங்குவை பொறுத்த வரை இந்தாண்டு 4,745 பேர் பாதிப்பிற்குள்ளாகி உள்ள னர். ஒவ்வொரு ஆண்டும் அதற்கான பாதிப்பு என்பது 10,000 வரை செல்லும், தற் போது அது குறைத்துள்ளது. இதுவரை 4 பேர் டெங்குவி னால் மரணமடைந்துள்ள னர். டெங்கு கட்டுப்பாட் டிற்குள் உள்ளதால் பொது மக்கள் அச்சம் கொள்ள தேவையில்லை.

### முதலமைச்சர் ஒன்றிய அரசுக்கு கடிதம்

முத்தமிழ் அறிஞர் கலை ஞர் அவர்கள் 2011 ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டத்திற்கும் ஒரு மருத்துவக் கல்லூரிகள் அமைக்க வேண்டும் என்று அறிவித்தார்கள். கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னர் ஒன் றிய பிரதமர் அவர்களும் இந் தியாவில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் மருத்து வக் கல்லூரிகள் அமைக்கப்ப டும் என்று அறிவித்துள்ளார் கள். இந்த நிலையில் தேசிய மருத்தவ ஆணையம் (National Medical Council) தென் மாநிலங் களில் மேற்கொண்டு மருத்து வக் கல்லூரிகள் அமைக்கப்ப டாது என்பது போன்ற அறிவிப்பினை வெளியிட் டுள்ளார்கள். தமிழ்நாட்டை பொறுத்தவரை இன்னும் பெரம்பலூர், மயிலாடுதுறை, தென்காசி, இராணிப் பேட்டை, திருப்பத்தூர் மற் றும் காஞ்சிபுரம் ஆகிய 6 மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரிகள் வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்து வைக் கப்பட்டு வருகிறது. இந்தநி லையில் உடனடியாக தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள், ஒன்றிய அரசுக்கு, தேசிய மருத்துவ ஆணையத்தின் கொள்கை சரியாக இருக்காது என்ற மறுப்பு கடிதம் எழுதி யுள்ளார்கள். நேற்று டெல் லிக்கு பட்ஜட் கலந்துரையா டல் கூட்டத்திற்கு சென்ற மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் அவர்கள் தேசிய மருத்துவ ஆணையத்தின் நிர்வாகிகளை சந்தித்து தமிழ்நாட்டிற்கு கூடு தலாக மருத்துவக் கல்லூரிகள் தேவை என்பதை வலியுறுத் தியுள்ளார் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தெரிவித் தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செய லாளர் ககன்தீப் சிங் பேடி, உணவு பாதுகாப்புத் துறை ஆணையாளர் லால்வேனா, தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் திட்ட இயக்குநர் ஹரிஹரன், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் கோவிந்தராவ், பொது சுகாதாரம் மற்றம் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவி நாயகம், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.இரா.சாந்திமலர், உணவு பாதுகாப்புத்துறை கூடுதல் ஆணையாளர் மரு.தேவ பார்த்தசாரதி, திருவள்ளூர் மாவட்ட உணவு பாதுகாப் புத் துறை நியமன அலுவலர் மரு.ஜெகதீஷ்சந்திரபோஸ், கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை இயக் குநர் மரு.பார்த்தசாரதி, ஒருங்கிணைப்பு அலுவலர் மரு.ரமேஷ் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண் டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (06.10.2023), சென்னை, கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில், தமிழ்நாடு உணவுப் பாதுகாப்புத் துறையின் மூலம், திருவள்ளூர் மற்றும் ஆவடி இரயில் நிலையங்களுக்கு "Eat Right Station என்ற தரச்சான்றிதழ்கள் வழங்கினார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, உணவுப் பாதுகாப்புத் துறை ஆணையாளர் லால்வேனா, தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் திட்ட இயக்குநர் ஹரிஹரன், தேசிய நலவாழ்வு குழம இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் கோவிந்தராவ், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மரு. தி.சி.செல்வவிநாயகம், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.இரா.சாந்திமலர், உணவுப் பாதுகாப்புத்துறை கூடுதல் ஆணையாளர் மரு.தேவபார்த்தசாரதி, திருவள்ளூர் மாவட்ட உணவுப் பாதுகாப்புத் துறை நியமன அலுவலர் மரு.ஜெகதீஷ்சந்திரபோஸ். கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.பார்த்தசாரதி, ஒருங்கிணைப்பு அலுவலர் மரு.ரமேஷ் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தி.க.வும் - தி.மு.க.வும் உயிரும் உணர்வும் போல் இணைந்து தமிழின உயர்வுக்குப் பாடுபடுகிறோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

என்னைப் பொறுத்தவரையில், தி.க.வும் தி.மு.க.வும் உயிரும் உணர்வும் போல! உயிரும் உணர்வும் இணைந்து உடல் இயங்குவது போலத்தான் நாம் இந்த இனத்தின் உயர்வுக்காகப் தொடர்ந்து பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம்!

கலைஞருக்கு நூற்றாண்டு விழா நடத்தும் முழுத் தகுதியும் கடமையும் திராவிடர் கழகத்துக்கு உண்டு. திராவிட முன்னேற்றக் கழகம் உதயமாவதற்கு முன்பே, சுயமரியாதை இயக்கத்தின் வீரராக, திராவிடர் கழகத்தின் தீரராக இருந்தவர்தான் கலைஞர் அவர்கள். இன்னும் சொன்னால் பேரறிஞர் அண்ணா அவர்களைச் சந்திப்பதற்கு முன்னதாக தந்தை பெரியாரைச் சந்தித்தவர் கலைஞர் அவர்கள்.

1937ஆம் ஆண்டு திருவாரூர் கமலாலயக் குளக்கரையில் நடந்த பொதுக் கூட்டத்தில் தந்தை பெரியாரின் உரையை முதன்முதலாகக் கேட்டதாகவும், அன்றைய தினம் ஆரஞ்சு நிற சால்வை அணிந்து பளபளவென பெரியார் அவர்கள் மின்னியதாகவும் கலைஞர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். திருவாரூர் உயர்நிலைப்பள்ளியில் படிக்கும்போது இறுதி ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வை எழுதாமல், தந்தை பெரியாரின் சுற்றுப் பயண பேச்சைக் கேட்கப் போனதால் தேர்வில் தோற்றுப் போனவர் கலைஞர் அவர்கள்.

**ஈரோட்டுப் பள்ளி - காஞ்சிக் கல்லூரியில் பயின்றவன் என பெருமையாகச் சொன்னவர் கலைஞர்!**

'நான் பள்ளிப் பாடத்தில் தோற்றேன். ஆனால் பெரியாரின் பள்ளிக் கூடத்தில் வெற்றி பெற்றுவிட்டேன்'

## முத்தமிழறிஞர் கலைஞர் இல்லாத நேரத்தில் எனக்கு கொள்கை வழிகாட்டியாக இருப்பவர் அய்யா ஆசிரியர்!

என்று பெருமைப்பட்டவர் கலைஞர் அவர்கள். "நான் படித்ததெல்லாம் ஈரோட்டுப் பள்ளிக்கூடம் காஞ்சிக் கல்லூரி மட்டும்தான்" என்று பெருமையாக பத்து பல்கலைக்கழகங்களில் டாக்டர் பட்டம் வாங்கியதைப் போன்ற பெருமையோடு சொன்னவர் கலைஞர் அவர்கள்.

அதனால்தான் அவர் படித்த பள்ளிக் கூடத்தின் சார்பில், ஈரோடு குருகுலத்தின் சார்பில், இந்த நூற்றாண்டு விழா நடப்பது மிகமிக பொருத்தமானது. பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களது மறைவுக்குப் பிறகு, சிலர் குழப்பம் ஏற்படுத்த முனைந்தபோது முதலமைச்சர் பொறுப்பு வேண்டாம் என்று மறுத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். ஆனால் நீங்கள் முதலமைச்சரானால்தான் இயக்கம் காக்கப்படும் தமிழ்நாடு காக்கப்படும் என்று சொன்னவர் தந்தை பெரியார் அவர்கள். அவருக்காக தூது வந்தவர்தான் மானமிகு ஆசிரியர் அவர்கள். அந்த வகையில் கலைஞர் அவர்களை முதலமைச்சர் ஆக்கியவர் தந்தை பெரியார். தலைவர் கலைஞர் அவர்களுக்குத் தலைநகர் சென்னையில் முதன்முதலாகச் சிலை அமைத்தவர் அன்னை மணியம்மையார் அவர்கள்.

இன்றைய தினம் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை மிகப் பிரமாண்டமாக நடத்தி, 'தாய் வீட்டில் கலைஞர்' என்ற களஞ்சியத்தை உருவாக்கிக் கொடுத்துள்ளார் மானமிகு ஆசிரியர் அவர்கள்.

**தாய் வீட்டில் கலைஞர் என்ற களஞ்சியத்தை உருவாக்கியுள்ள ஆசிரியர்!**

திராவிடர் கழகத்தில்.

★ தந்தை பெரியார்

★ அன்னை மணியம்மையார்

★ மானமிகு ஆசிரியர் அவர்கள் என்றால்

திராவிட முன்னேற்றக் கழகத்தில்,

★ பேரறிஞர் அண்ணா

★ தமிழினத் தலைவர் கலைஞர்

★ இந்த அடியன் என மூன்று சகாப்தங்களாக இணைந்து பணியாற்றி வருகிறோம். கருப்பும் சிவப்பும் இணைந்ததே திராவிட இயக்கம் என்பதைப் போல இணைந்தே இருக்கிறோம். இணைந்தே இருப்போம்!

ஐம்பது ஆண்டுகாலம் ஒரு இயக்கத்தின் தலைவராக இருந்தவர் கலைஞர் அவர்கள். ஐந்து முறை இந்த மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தவர் கலைஞர் அவர்கள். அவரது கண்ணசைவில் இந்தியப் பிரதமர்களையும் குடியரசுத் தலைவர்களையும் உருவாக்கியவர் கலைஞர். ஆனால், உங்களை இந்த நாடு எப்படி அடையாளம் காண வேண்டும் என்று கேட்டபோது, "மானமிகு சுயமரியாதைக்காரன்" என்ற ஒற்றை வரியில்தான் தலைவர் கலைஞர் அவர்களின் 95 ஆண்டு கால வாழ்க்கை அடங்கி இருக்கிறது. மானமிகு சுயமரியாதைக்காரன் என்று சொன்ன கலைஞர் அவர்கள், குடியரசு இதழில் எழுதியதும் பெரியார் மேடைகளில் பேசியதும் என தொகுத்து மிகப்பெரிய களஞ்சியமாக தாய்வீட்டில் கலைஞர் என்ற நூலை உருவாக்கிக் கொடுத்துள்ளார் ஆசிரியர் வீரமணி அவர்கள்.

கோபாலபுரம் இல்லத்தில்

பெரியாருக்கு உணவு பரிமாறினேன்!

நெஞ்சுக்கு நீதியில் ஆறு பாகங்களை தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி இருக்கிறார்கள். தாய்வீட்டில் கலைஞர் என்ற இந்த நூல் ஏழாவது பாகம் போல இருக்கிறது.

★ குடியரசு அலுவலகத்தின் துணையாசிரியராக இருந்தது,

★ நாற்பது ரூபாய் சம்பளத்தில் வேலை பார்த்தது,

★ அன்னை மணிம்மையார் கையால் ஓராண்டு காலம் சாப்பிட்டது,

★ தனது ரத்தத்தைத் தொட்டு திராவிட கழகக் கொடியை உருவாக்கியது,

★ புதுவையில் கலைஞர் தாக்கப்பட்டபோது காப்பாற்றிப் பெரியார் அவர்கள் மருந்திட்டது,

★ என் அண்ணன் முத்து அவர்கள் பிறந்தபோது குழந்தையைப் பெரியார் கையில் தலைவர் கலைஞர் கொடுத்தது,

★ என் அண்ணன் அழகிரி அவர்கள் திருமணத்தை பெரியார் அவர்கள் நடத்தி வைத்தது,

இப்படி எத்தனையோ காட்சிகள் இந்தப் புத்தகம் முழுவதும் இடம்பெற்றிருக்கிறது.

அதிலும் குறிப்பாக அண்ணன் அழகிரி அவர்களது திருமணம் பெரியார் திடலாக நடந்தது. அதற்குப்பிறகு, தந்தை பெரியார் அவர்களுக்கு கோபாலபுரம் இல்லத்தில் விருந்து. அப்போது

## தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – தமிழினத் தலைவர் கலைஞர் ஆகியோரின் கொள்கை கோட்பாடுகளை ஒலித்துக் கொண்டே இருப்போம்!

பெரியார் அவர்களுக்கு உணவு பரிமாறியவன் நான் என்பதை இந்த நேரத்தில் நினைத்துப் பார்க்கிறேன்.

**பெரியாரிடம் கலைஞர் வைத்த மரியாதை உணர்வுப் பூர்வமானது!**

இது தமிழர்தம் இல்லமெல்லாம் உள்ளமெல்லாம் இருக்க வேண்டிய நூல்! இதனை உருவாக்கித் தந்துள்ள ஆசிரியர் அவர்களை நன்றியால் வணங்குகிறேன். உலகில் எந்த இரண்டு இயக்கங்களுக்குள்ளும் இத்தகைய நட்பும் உறவும் இருந்திருக்க முடியாது. முரண்பட்டு மோதல் நடத்திய காலங்கள் உண்டு. யானை தனது குட்டியைப் பழக்கும்போது மிதிக்கும் அடிக்கும் என்பதைப் போல பெரியார் எங்களைத் திட்டித் திட்டிப் பழக்கினார் என்று கலைஞர் அவர்கள் சொல்வார்கள். தந்தை பெரியார் மீது தலைவர் கலைஞர் வைத்திருந்த மரியாதை என்பது உணர்வுப்பூர்வமானது. அதற்கு மிகச்சிறந்த உதாரணம் பெரியார் அவர்கள் மறைந்தபோது அவருக்கு அரசு மரியாதை தர வேண்டும் என்று முதல்வர் கலைஞர் அவர்கள் எடுத்த முடிவு!

"அரசு மரியாதை வழங்க வேண்டும்" என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சொல்கிறார்கள். "அவர் எந்த அரசுப் பதவியிலும் இல்லையே" என்று மூத்த அதிகாரி ஒருவர் சொல்கிறார். உடனே, "காந்திக்கு அரசு மரியாதை கொடுத்தார்களே. அவர் எந்த பதவியில் இருந்தார்?" என்று பட்டென்று கேட்டார் கலைஞர். அதன்பிறகும் அந்த அதிகாரி விடவில்லை. "மாநில அரசு இப்படி ஒரு முடிவெடுத்தால் மத்திய அரசின் கோபத்துக்கு ஆளாக வேண்டி வரும்" என்று அந்த அதிகாரி சொல்கிறார். "கோபப்பட்டால் என்ன செய்வார்கள்?" என்று முதலமைச்சர் கலைஞர் கேட்கிறார்கள். "ஆட்சியைக் கூடக் கலைக்கலாம்" என்கிறார் அந்த அதிகாரி.

"ஆட்சியைக் கலைக்க இதுதான் காரணமாக இருக்குமானால் இதை விடப் பெருமை எனக்கு எதுவும் கிடையாது" என்கிறார் முதலமைச்சர் கலைஞர். இது ஏதோ அறிவாலயத்தில் நடந்த உரையாடல் அல்ல. கோட்டையில் நடந்த உரையாடல். தமிழ்நாடு அரசின் கோட்டையில் முதலமைச்சராக கலைஞர் அவர்கள் இருந்தாலும், தந்தை பெரியார் என்ற கொள்கைக் கோட்டையில் தலைமகனாக இருந்தார் தலைவர் கலைஞர் அவர்கள்.

**கழக ஆட்சி பெரியாருக்கு காணிக்கை என்றார் அண்ணா!**

ஆட்சியே தந்தை பெரியாருக்குக் காணிக்கை என்றார் பேரறிஞர் அண்ணா. தமிழ்நாடு அரசுதான் பெரியார் பெரியார்தான் தமிழ்நாடு அரசு என்றார் தலைவர் கலைஞர். நானும் இதனையே வழிமொழிந்து வருகிறேன். உங்களின் பலத்த கரகோஷங்களுக்கிடைய மீண்டும் அதனை வழிமொழிகிறேன்.

தமிழ்நாடு அனைத்து வகையிலும் முன்னேறிய மாநிலமாக மட்டுமல்ல, தன்னிறைவு பெற்ற மாநிலமாக உயர வேண்டும். இந்திய ஒன்றிய அரசின் ஆட்சிக் கருத்தியலாக, கூட்டாட்சிக் கருத்தியல் மலர வேண்டும். அனைத்து தேசிய இனங்களும் உரிமை பெற்றவைகளாகவும், அனைத்து மாநில மொழிகளும் ஒன்றிய ஆட்சி மொழியாக உயர்ந்து நிற்க வேண்டும். அனைவர் குரலுக்கும் ஒரே மரியாதையும் மதிப்பும் இருக்க வேண்டும். இதுதான் இந்திய ஒன்றியமும் அதில் உள்ளடங்கிய தமிழ்நாடும் இயங்க வேண்டிய முறை! அத்தகைய கூட்டாட்சிக் கருத்தியலை உள்ளடக்கிய இந்தியாவை அமைப்பதற்காகவே இந்தியா கூட்டணியை அமைத்துள்ளோம்.

இது அரசியல் கூட்டணி அல்ல; கொள்கைக் கூட்டணி! தேர்தல் வெற்றியை மட்டும் கணக்கில் கொண்டு இதனை நாங்கள் உருவாக்கவில்லை. அந்த வெற்றிக்குப் பின்னால் அமையப் போகும் ஆட்சியில் கோலோச்ச வேண்டிய கொள்கைகளை மனதில் வைத்தே நாங்கள் செயல்படுகிறோம்.

**தமிழ்நாடு இழந்த உரிமைகளை மீட்டே தீருவோம்!**

தமிழ்நாடு இதுவரை இழந்த அனைத்து உரிமைகளும் மீட்கப்படும். மீட்கப்பட்டே தீர வேண்டும். கல்வி உரிமை நிதி உரிமை சமூகநீதி உரிமை மொழி உரிமை இன உரிமை மாநில சுயாட்சி உரிமை ஆகிய அனைத்தையும் மீட்போம். தமிழ்நாட்டின் நாடாளுமன்ற மக்களாட்சி உரிமைக்குக் கேடு விளைவிக்கப் பார்க்கிறார்கள்.

மக்கள் தொகை குறைந்துவிட்டது என்று சொல்லி நாடாளுமன்றத் தொகுதியின் எண்ணிக்கையைக் குறைக்கும் சதிச்செயலை அரங்கேற்றப் பார்க்கிறார்கள். தமிழ்நாட்டில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை முறையாகச் செயல்படுத்தியதற்குத் தண்டனையாக, நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி எண்ணிக்கையை குறைக்கப் போகிறார்கள். 39 எம்.பி.க்கள் தமிழ்நாட்டில் இருந்து செல்கிறார்கள் என்றால் நம்முடைய உரிமையை எடுத்துச் சொல்ல உரிமையை நிலைநாட்டச் செல்கிறார்கள் என்று பொருள். இந்த எண்ணிக்கையானது கூட வேண்டுமே தவிர குறையக் கூடாது.

அதே போல் மகளிருக்கான 33 விழுக்காடு இடஒதுக்கீட்டையும் பா.ஜ.க. முழு ஈடுபாட்டுடன் கொண்டு வரவில்லை. மக்கள்தொகை கணக்கெடுப்பு முடிந்தபிறகு, தொகுதி வரையறை முடிந்த பிறகு என்று சொல்வதே இதை நிறைவேற்றாமல் இருக்கும் தந்திரம்தான். அதிலும் குறிப்பாக, இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான மகளிர் இடஒதுக்கீட்டை வழங்க மறுப்பது என்பது பா.ஜ.க.வின் உயர் வகுப்பு மனோபாவம்! காலப்போக்கில் பட்டியலின இடஒதுக்கீட்டையும் காலி செய்துவிடும் ஆபத்தும் இதில் இருக்கிறது.

தமிழ் மொழி காக்க தமிழினம் காக்க தமிழ்நாட்டைக் காக்க இந்தியா முழுமைக்கும் சமதர்ம சமத்துவ சகோதரத்துவ சமூகநீதியைக் காக்க எனது வாழ்க்கையை முழுமையாக ஒப்படைத்துக் கொள்கிறேன் என்பதுதான் எனக்கு திராவிடர் கழகம் நடத்தி இருக்கும் இந்த பாராட்டு விழாவில் நான் எடுத்துக் கொள்ளும் உறுதிமொழி!

**இன்னும் சாதிக்க வேண்டியது நிறைய இருக்கிறது என உணர்த்தும் விழா!**

ஏதோ சாதித்துவிட்டான் – நினைத்ததை முடித்துவிட்டான் என்பதற்காக நடத்துகிற விழா அல்ல. இன்னும் நீ சாதிக்க வேண்டியது நிரம்ப இருக்கிறது. அதைச் சாதிப்பதற்கு நீ தயாராக இருக்க வேண்டும். நாங்கள் பக்கபலமாக இருக்கிறோம் என்பதை சொல்லிக்கொள்வதற்காகத்தான் இந்தப் பாராட்டு விழா நடந்து கொண்டிருக்கிறது. எனக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பை மிகச் சரியாக முறையாகப் பயன்படுத்துவேன்.

தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா தமிழினத் தலைவர் கலைஞர் ஆகியோரின் கொள்கை கோட்பாடுகளை, சட்டமன்ற நாடாளுமன்ற – மக்கள் மன்றங்களில் நாங்கள் ஒலிப்போம். மக்கள் மன்றத்தில் திராவிடர் கழகத் தோழர்கள் திராவிடர் இயக்கத் தோழர்கள் பெரியாரின் தொண்டர்கள் தொய்வின்றித் தொடருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

'வீரமணி வென்றிடுக!' என்று சொன்னார் தலைவர் கலைஞர் அவர்கள். அதையே நானும் வழிமொழிகிறேன். அய்யா ஆசிரியர் அவர்களே, ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள் என்று நான் சொன்னால் அவருக்குக் கோபம் வந்துவிடும். அவருக்கு பிடிக்காது. இருந்தாலும் சொல்ல வேண்டிய கடமை எனக்கு உண்டு. ஓய்வெடுத்துப் பணியாற்றுங்கள். பெரியாரையும் கலைஞரையும் கடந்தும் நீங்கள் வாழ வேண்டும்.

**பெரியாரின் மாட்சி இன்னும் பரவ ஆசிரியர் நீண்டகாலம் வாழ வேண்டும்!**

'பெரியாரின் ஆட்சிக்கு நாங்கள் காரணகர்த்தாக்கள். பெரியாரின் மாட்சிக்கு வீரமணிதான் காரணம்' என்று சொன்னார் தலைவர் கலைஞர் அவர்கள். பெரியாரின் மாட்சி இன்னும் பரவ நீங்கள் நீண்ட காலம் வாழ வேண்டும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



செங்கல்பட்டு மாவட்டம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் கர்ப்பிணிப் பெண்களுக்கு நடைபெற்ற சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்து சீர்வரிசைகளை வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆ.ர.ராகுல்நாத், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் வரலட்சுமி மதுசூதனன், அரவிந்த ரமேஷ், எஸ்.எஸ்.பாலாஜி, ஒன்றியக் குழு தலைவர்கள் எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், உதயா கருணாகரன், மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் செம்பருத்தி துர்கேஷ், வி.எஸ். ஆராமுதன், ஜி.சி.அன்புச்செழியன், மு.தேவராஜ், அரசு அலுவலர்கள், கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



பெருநகர சென்னை மாநகராட்சி, அம்பத்தூர் மண்டலம், கொரட்டூர், சுவாதி பேலஸில் நேற்று (06.10.2023) நடைபெற்ற மக்களைத் தேடி மேயர் சிறப்பு முகாம் நிகழ்ச்சியில் மேயர் திருமதி ஆர்.பிரியா கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்துப் பெட்டகங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜோசப் சாமுவேல் (அம்பத்தூர்), காராம்பாக்கம் கா.கணபதி (மதுரவாயல்), துணை மேயர் மு.மகேஷ்குமார் , கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், மத்திய வட்டார துணை ஆணையாளர் எஸ்.ஷேக் அப்துல் ரஹ்மான், மண்டலக்குழுத் தலைவர் பி. கே.மூர்த்தி, நிலைக்குழுத் தலைவர் (சுகாதாரம்) டாக்டர் கோ.சாந்தகுமாரி , மண்டல அலுவலர், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி உள்ளிட்ட தொடர்புடைய துறைகளின் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

‘நான் முதல்வன்’ திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்ற

# 1200 மாணவ - மாணவியருக்கு பல்வேறு நிறுவனங்களில் பணி நியமன ஆணைகள்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி வாழ்த்தினார்!

சென்னை, அக்.7-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் “நான் முதல்வன்” திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்று பல்வேறு நிறுவனங்களில் பணி நியமனம் பெற்றுள்ள 1,200 மாணவ, மாணவியருக்கு பணி நியமன ஆணைகளை நேற்று (6.10.2023) கோட்டூர்புரத்திலுள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற விழாவில் வழங்கினார்.

பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்கள் அனைவரும், இன்றைய தொழில் துறைக்கு தேவையான நவீன திறன்களை கற்றுணர்ந்து அவர்களது துறைகளில் சிறந்த வேலைவாய்ப்புகளை பெற்று வெற்றிபெற ஏதுவாக முதலமைச்சர் அவர்களால் 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் துவங்கிவைக்கப்பட்ட மாபெரும் திறன் மேம்பாட்டிற்கான திட்டம் தான் நான் முதல்வன் திட்டம். இத்திட்டம் தொடங்கிய முதல் ஆண்டில் 13 இலட்சம் மாணவர்கள் பயன் பெற்றும், நடைபெற்றுக் கொண்டிருக்கும் இரண்டாம் ஆண்டில் 15 இலட்சம் மாணவர்களுக்கு பயனளித்தும் வெற்றிகரமாக பயணித்துக் கொண்டுள்ளது.

துறைவாரியாக ஒவ்வொருபட்டப்படிப்பிற்கும் ஏற்ற திறன்சார்ந்த கல்வி பாடங்களை உயர்கல்வியில் இணைத்து புதுமை படைத்து வரும் திட்டமே நான் முதல்வன் திட்டம். இத்திட்டம் பொறியியல் கல்லூரிகளில் துவங்கி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டு பின்னர் இந்த ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் நடைபெற்ற முதலாம் ஆண்டு வெற்றி விழாவில் முதலமைச்சர் அவர்களால் பாலிடெக்னிக் மற்றும் தொழிற்பயிற்சி நிலைய மாணவர்கள் பயன்பெறும் நிலையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தகுந்த வளர்ச்சியாகும்.

மாணவர்களுக்கான திறன் பயிற்சி, ஆசிரியர்களுக்கான பயிற்றுவிப்பு திறன் பயிற்சி, மொழித்திறன் பயிற்சி, மென்திறன் பயிற்சி, திட்ட செயல்முறை பயிற்சி, என பல்வகையான பயிற்சிகளால் மாணவர்களை மேம்படுத்தும் திட்டமாக செதுக்கி பன்முகத்தன்மை கொண்டது இத்திட்டம்.

நான் முதல்வன் திட்டம் தொடங்கி முதலாம் ஆண்டு இறுதியில் 2022 மார்ச் முதல் மே மாதம் வரை கல்லூரி வளாக வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டு அதிக மாணவர்கள் பயன்பெறும் வகையில் பல முன்னணி நிறுவனங்களுடன் இணைந்து வருடந்தோறும் வேலைவாய்ப்பு முகாம்கள் தொடர்ச்சியாக நடைபெற்ற வண்ணம் உள்ளன.

நான் முதல்வன் திட்டத்தின் மூலம் திறன் பயிற்சி பெற்று முன்னணி நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்ற இளைஞர்களுக்கு பணி ஆணைகள் வழங்கும் விழாவில் 1200 மாணவ, மாணவியர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்தி உரையாற்றினார்.

**மூன்று குழுக்களுக்கு பரிசுத் தொகை!**

விழாவில் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், TCS, Sales Force, TVS, FOX CONN, Sutherland, Tech Mahindra, Ashok Leyland, Sundaram Brake linings, Uni tech, போன்ற பல முன்னனி நிறுவனங்களின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ - மாணவியர்களுக்கு பணி ஆணைகளையும், IIT மும்பை, நிறுவனத்தினால் Mapathons Championship போட்டியில் வெற்றி பெற்ற 3-குழுவிற்கு பரிசுத்தொகையாக தலா ரூபாய். 10 ஆயிரத்தினையும் வழங்கினார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் TCS Ion, IIT Pravartak Technologies Foundation, Coca Cola போன்ற முன்னணி நிறுவனங்களுக்கும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகத்திற்கும் இடையே உயர்கல்வி வழிகாட்டுதல், ஆங்கில மொழித்திறன் வளர்த்தல், விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் திறன் பயிற்சி வழங்குதல் ஆகியவைகளுக்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

GUVI Geek Network நிறுவனத்தினால் Tamil Nadu Coders Premier League துவக்கி வைக்கப்பட்டது. மேலும், Cambridge நிறுவனத்தால் மாணவர்களின் ஆங்கில மொழித் திறன் கற்றலுக்கென பிரத்யேகமாக தொலைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை செயலர் தாரேஷ் அகமது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழக மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெ.இன்னசென்ட் திவ்யா, CII அமைப்பின் தமிழ்நாடு தென்னிந்திய பிரிவின் தலைவர் சங்கர்வானவராயர், நான் முதல்வன் திட்ட முதன்மைச் செயல் அலுவலர் ஜெயபிரகாசன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# விஷமிகளின் விஷமத்தனம்!

## 'முரசொலி' முகநூல் பற்றி விளக்கம்!

**'முரசொலி' முகநூல் பக்கத்தில் கடந்த இரண்டு நாட்களாக தேவையற்ற சில புகைப்படங்களை சில விஷமிகள் பதிவேற்றம் செய்து வருகின்றனர்.**

**இவ்வாறு, 'முரசொலி' முகநூல் பக்கத்தை 'ஹேக்' செய்து விஷமிகள் மேற்கொண்ட செயல் குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள, உடனடியாக சென்னை மாநகர காவல் துறை 'சைபர் கிரைம்' பிரிவில் புகார் தரப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.**

# சிசோடியா மீதான புகாருக்கு ஆதாரம் எங்கே?

## உச்ச நீதிமன்றம் கேள்வி!

புதுடெல்லி, அக். 7 -

டெல்லியில் ஆளும் ஆம் ஆத்மி அரசு கடந்த 2021-ல் புதிய மதுபான கொள்கையை அமல்படுத்தியது. இதில் முறைகேடு நடந்ததாக புகார் எழுந்தது. இதையடுத்து, சி.பி.ஐ., அமலாக்கத் துறை ஆகியவை தனித்தனியாக வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றன.

இந்த வழக்கில் டெல்லி முன்னாள் துணை முதல்வர் மணிஷ் சிசோடியா உள்ளிட்ட சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில், மணிஷ் சிசோடியா தாக்கல் செய்த ஜாமீன் மனு, உச்சநீதிமன்றத்தில் நேற்று முன் தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது, சி.பி.ஐ. மற்றும் அமலாக்கத் துறை சார்பில் ஆஜரான வழக்கறிஞர்களிடம் நீதிபதிகள் கூறியதாவது:

டெல்லி மதுபான கொள்கை விவகாரத்தில் லஞ்சம் கைமாறியதாக கூறுகிறீர்கள்.

யார் அதை வழங்கினார்கள்?

இந்த வழக்கில் மணிஷ் சிசோடியா மீதான புகாருக்கு ஆதாரம் எங்கே?

தினேஷ் அரோரா என்பவரின் வாக்குமூலத்தைத் தவிர வேறு ஏதாவது ஆதாரமோ, ஆவணமோ இருக்கிறதா?

சட்டவிரோத பணப்பரிவர்த்தனை தடுப்பு சட்டத்தின் கீழ் இவர் மீது எப்படி குற்றம்சாட்டுகிறீர்கள்?

இவ்வாறு அடுக்கடுக்கான கேள்விகளை நீதிபதிகள் எழுப்பினர்.

முட்டுக்காடு சுற்றுலா வளர்ச்சிக் கழக படகு குழும வளாகத்தில்

# ரூ.5 கோடி மதிப்பீட்டில் மிதக்கும் உணவுக் கப்பல்!

## அமைச்சர் கா.இராமச்சந்திரன் ஆய்வு!

*சென்னை, அக்.8-*

*செங்கல்பட்டு மாவட்டம், முட்டுக்காடு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக படகு குழாம் வளாகத்தில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் 125 அடி நீளம், 25 அடி அகலத்தில் பிரம்மாண்டமான இரண்டு அடுக்கு மிதக்கும் உணவக கப்பல் கட்டுமானப் பணியினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று (6.10.2023) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.*



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள சாலையோர வியாபாரிகளுக்கு திருவேற்காடு நகராட்சி சார்பில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 50 நபர்களுக்கு சாலையோர கடையை முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நகர் மன்றத் தலைவர் என்.இ.கே.மூர்த்தி, நகராட்சி ஆணையர் ஏ.ஜஹாங்கீர் பாஷா, நகர அமைப்பு ஆய்வாளர் விக்னேஸ்வரன், சுகாதார அலுவலர் ஆல்பர்ட் அருள்ராஜ், மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள் கவுன்சிலர்கள் வட்டக் கழக செயலாளர்கள் ஏ.ஜெ.பவுல், ஆர்.காந்தி, எஸ்.சங்கர், பெண்ணியமின், குமாரசாமி, கோலடி ஜெ. சரவணன், பானு அரசு, நடுகுத்தகை கே.சுரேஷ்குமார், மா.செ.அக்னி ராஜேஷ், பி.உமாபதி, பரிசமுத்து, துரைகோபால், இளகோவன், பிரதானம், பி.சாந்தகுமார், விநாயகம், சாது,பேபிஸ்ரீ, அமலேஷ்வரி, ராஜா, சுடலைமணி, இளையராஜா, என்.ராஜி, நரேஷ், உள்பட பலர் உள்ளனர்.

*இந்த ஆய்வின்போது சுற்றுலாத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :*

*முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டை சுற்றுலாத்துறையில் முதன்மை மாநிலமாக உருவாக்கி வருகின்றார்கள். தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சுற்றுலா வளர்ச்சி பெறும் வகையில் தமிழ்நாடு சுற்றுலா கொள்கையை வெளியிட்டு, சுற்றுலாவை தொழில் தகுதி பெறச் செய்துள்ளார். இதனால் சுற்றுலாத்துறை சம்மந்தமான தொழில்களில் ஈடுபடுபவர்களுக்கு ஊக்கத்தொகை, மானியம் உள்ளிட்ட ஏராளமான சலுகைகள் கிடைக்கும் வாய்ப்பு உருவாகியுள்ளது.*

*சென்னை கிழக்குக் கடற்கரைச் சாலையில் அமைந்துள்ள முட்டுக்காட்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் மூலம் படகு இல்லம் இயக்கப்பட்டு வருகின்றது. இந்தப் படகு இல்லத்தில் பொதுமக்கள் சாகச பயணம் மேற்கொள்ளும் வகையில் மிதவை படகுகள், இயந்திரப் படகுகள், வேகமான இயந்திரப் படகுகள் இயக்கப்பட்டு வருகின்றன.*

*மேலும் ஏராளமான சுற்றுலாப் பயணிகளை வருகை தர வைக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக இந்தப் படகு இல்லத்தில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் 125 அடி நீளம், 25 அடி அகலத்தில் பிரம்மாண்டமான இரண்டு அடுக்கு மிதக்கும் உணவக கப்பல் பயணம் தொடங்கப்பட உள்ளது.*

*இத்திட்டம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மற்றும் கொச்சியைச் சேர்ந்த கிராண்ட்யூனர் மரைன் இன்டர்நேஷனல் நிறுவனத்தின் மூலமாக தனியார் மற்றும் பொது பங்களிப்பு மூலம் செயல்படுத்தப்பட உள்ளது. தமிழ்நாட்டில் முதல் முறையாக மிதவை உணவக கப்பல் (Floating Restaurant) அமைக்கப்படுகிறது.*

*இந்த மிதக்கும் உணவகத்தின் தரைத்தளம் முழுவதும் குளிரூட்டப்பட்ட வசதியுடன் அமைக்கப்பட உள்ளது. முதல் தளம் திறந்த வெளி தளமாகவும், சுற்றுலா பயணிகள் மேல் தளத்தில் அமர்ந்து உணவு உண்டு பயணிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.*

*இக்கப்பலில் சமயலறை, சேமிப்பு அறை, கழிவறை மற்றும் இயந்திர அறை (மோட்டார் இன்ஜின்) அமைக்கப்பட உள்ளது. இந்தக் கப்பல் 60 குதிரை சக்தி திறனுடைய இயந்திரம் மூலம் இயக்கப்படும் வகையில் வடிவமைக்கப்பட உள்ளது. இரண்டு அடுக்கு உணவக பயணக் கப்பல் நீளம் 125 அடியும் அகலம் 25 அடியும் கொண்டதாகும்.*

*மிதக்கும் உணவகம் அமைக்கும் பணியில் முக்கியமான படகு அமைக்கும் பணியின் கட்டுமானம் முழுமையடைந்து முதல் தளம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த மிதக்கும் உணவகம் அமைக்கும் பணி சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டு வரும் வகையில் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன என்று தெரிவித்தார்.*

*இந்தப் பணிகளை பார்வையிட்ட சுற்றுலாத்துறை அமைச்சர் தொடர்ந்து முதலியார் குப்பத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் படகு குழாமில் இருந்து முதலியார் குப்பம் தீவுப்பகுதிக்கு செய்யூர் சட்டமன்ற உறுப்பினர் மு.பாபு அவர்களுடன் படகில் பயணம் மேற்கொண்டு ஆய்வு மேற்கொண்டார்.*

*தொடர்ந்து மாமல்லபுரத்தில் உள்ள கடற்கரை கோயிலுக்கு வருகைதந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுடன் கலந்துரையாடினார். மாமல்லபுரத்தில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான இடங்களில் ஆய்வு மேற்கொண்டார்.*

*இந்த நிகழ்வுகளில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொதுமேலாளர் திருமதி.இ.கமலா உள்பட சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**நீலநாராயணன்**

**அக்டோபர் 7 (1996)**



**எல்லோராலும் ‘நீலம்’ என்று அன்புடன் அழைக்கப்பட்டவர்.**

**பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரிடம் அளவற்ற பற்றும் பாசமும் கொண்டவர்.**

**கழக அமைப்புச் செயலாளராகவும் சென்னை மாவட்டக் கழகச் செயலாளராக இரு முறையும் பணியாற்றியவர்.**

**தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்தவர்.**

**தலைமைக் கழகச் சார்பில் ‘பெரியார் விருது’ பெற்றவர்.**

**கழகம் அறிவித்த பல போராட்டங்களில் சிறை சென்றதோடு மிசா கைதியாக ஓராண்டு சிறையில் இருந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

உடல் உறுப்புதானம் செய்தோரின் இறுதிச் சடங்குகளுக்கு அரசு மரியாதை!

# போற்றப்பட வேண்டிய தியாகச் செம்மல்களுக்கு செலுத்த வேண்டிய உரிய அங்கீகாரம்!

## ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

*சென்னை, அக்.7-*

*இறக்கும் முன் உறுப்புதானம் செய்தோரின் இறுதிச் சடங்குகள் இனி அரசு மரியாதையுடன் நடக்கும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார். இது போற்றப்பட வேண்டிய அந்த தியாகச் செம்மல்களுக்கு செலுத்த வேண்டிய உரிய அங்கீகாரம் என ‘தினத்தந்தி’ நாளேடு 6.10.2023 அன்று தலையங்கம் வெளியிட்டுள்ளது.*

*அது வருமாறு:*

*தானத்தில் சிறந்த தானம் அன்னதானம் என்று பன்னெடுங்காலமாக கூறிவந்தார்கள். அவ்வாறு தானம் செய்வது சிறந்த புண்ணியமாக கருதப்பட்டது. ஆனால், மருத்துவத் துறை வளர்ச்சி அடைந்த பிறகு, எல்லா தானங்களிலும் சிறந்த தானம் உடல் உறுப்பு தானம்தான் என்று கூறப்படுகிறது.*

*இப்போது, இதயம், நுரையீரல், சிறுநீரகம், ஈரல், கணையம், கண்விழிபடலம், எலும்பு, தோல் என்று முக்கியமான உடல் உறுப்புகள் தானம் செய்யப்பட்டாலும், தானம் வழங்கியவர்களின் உடல்களுக்கு இறுதி சடங்குகளை செய்ய எந்தத் தடையும் இருக்காது. அவர்களுடைய தானம் செய்யப்படும் உறுப்புகள் பல உயிர்களை வாழவைக்கும். இந்த உடல் உறுப்பு தானம் என்ற புனிதமான சேவை 2008-ம் ஆண்டு செப்.23-ந்தேதிதான் தமிழ்நாட்டில் வெளியே தெரியத்தொடங்கியது. டாக்டர் தம்பதிகளான அசோகன் புஷ்பாஞ்சலி ஆகியோரின் 15 வயது மகன் ஹிதேந்திரன், இருசக்கர வாகன விபத்தில் சிக்கி, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தபோது, மூளைச் சாவு அடைந்த நிலையில், துக்கத்திலும் மகனின் உடல் உறுப்புகளை தானம் செய்து பலரின் மறுவாழ்வுக்கு வழி வகுத்து கொடுத்தனர். ஹிதேந்திரன் இறவா புகழோடு இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். தனது மகனின் இழப்பினால் துயருற்று இருந்த நேரத்திலும் அவரது உடல் உறுப்புகளை தானம் செய்த அந்த தியாக பெற்றோரை அப்போது முதல்-அமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் நேரில் அழைத்து நெஞ்சுருக பாராட்டினார்.*




*தேசிய உறுப்பு மற்றும் திசு மாற்ற அமைப்பு சார்பில் ஆண்டுதோறும் ஆகஸ்டு 3ந்தேதி உறுப்பு தான தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது. ஆனால், தமிழ்நாட்டில் ஹிதேந்திரன் நினைவாக, அவரது உடல் உறுப்புகள் தானம் செய்யப்பட்ட செப். 23 ந்தேதி தான் உறுப்பு மாற்று தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது. அன்று தொடங்கி இன்றுவரை பல நல்ல உள்ளங்கள், எதிர்பாராத விதமாக தங்கள் குடும்ப உறுப்பினர்கள் விபத்தில் சிக்கி மூளை சாவு அடைந்த நேரத்தில், மிகுந்த மனிதாபிமானத்தோடு, இரக்கத்தோடு இன்னொரு உயிர் மறுவாழ்வு பெறட்டும் என்ற உணர்வில் இதயம், நுரையீரல், சிறுநீரகம், ஈரல், கணையம், கண்விழி படலம், எலும்பு, தோல் போன்றவற்றை வழங்கியதன் மூலம் 1,730 பேரிடம் இருந்து உறுப்பு கொடை பெறப்பட்டு, மாற்று உறுப்புக்காக காத்திருந்த 6,327 பேருக்கு மேல் பொருத்தப்பட்டு, அவர்கள் மறுபிறவி பெற்றுள்ளனர்.*

*உறுப்பு தானம் வழங்குவதில் தேசிய அளவில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது. தமது உறுப்புகளை தந்து, பல உயிர்களை காப்போரின் தியாகத்தை போற்றும் வகையில், “இறக்கும் முன் உறுப்புதானம் செய்தோரின் இறுதி சடங்குகள் இனி அரசு மரியாதையுடன் நடக்கும்” என்று முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்திருக்கிறார்.*

*இந்த அறிவிப்பு வெளியான அடுத்த நாளே தேனியில் உடல் உறுப்பு தானம் செய்தவர் உடலுக்கு அமைச்சர் மா.சுப்பிர மணியனும், அதற்கு அடுத்த 2 நாளில் திருச்சியில் உடல் உறுப்பு தானம் செய்தவர் உடலுக்கு அமைச்சர் கே.என்.நேருவும் இறுதி மரியாதை செலுத்தினர். முதல்-அமைச்சர் அறிவித்த பிறகு 10 நாட்களில் மட்டும் 1,616 பேர் தாங்கள் இறந்த பிறகு உடல் உறுப்பு தானம் செய்வதாக எழுதிக் கொடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.*

*இந்த தியாகத்துக்கு அரசு மரியாதை என்பது, போற்றப்பட வேண்டிய அந்த தியாக செம்மல்களுக்கு செலுத்த வேண்டிய உரிய அங்கீகாரமாகும். உடல் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வை இன்னும் அதிகமாக மக்களிடையே ஏற்படுத்தவேண்டும்.*

*இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.*



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி மேற்கு ஒன்றியம், தோக்கமூர் ஊராட்சி, லிங்கப்பரெட்டிமேடு கிராமத்தில், மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி அமைப்பாளர் டி.மணி ஏற்பாட்டில், கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு கல்வெட்டு திறப்பு – கொடி ஏற்றி நல உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்டக் கழக செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் தலைமையில் ஒன்றிய செயலாளர் மு.மணிபாலன் முன்னிலையில் நடைபெற்றது. தலைமைக் கழக பேச்சாளர் செங்கை தாமஸ் பங்கேற்று சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் இ.ஏ.பி.சிவாஜி, சி.எச்.சேகர், மு.பகலவன், எம்.எல்.ரவி, மு.கதிரவன், எஸ்.ரமேஷ், பா.செ.குணசேகரன், கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், ஜி.ஸ்டாலின், டி.மஸ்தான், எம்.திருஞானம், உதயகாந்தம்மாள், எம்.கே.ஏசுரத்தினம், கே.பரத்குமார், ஆர்.ஜெய்பிரகாசம், கே.ஆறுமுகம் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## ‘நான் முதல்வன்’ திட்டத்தில் இலக்கை தாண்டி பயிற்சி!

# தமிழ்நாட்டை தேடி வரும் வெளிநாட்டு நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, அக்.7-**

**‘நான் முதல்வன்’ திட்டத்தில் ஓர் ஆண்டில் 10 இலட்சம் பேருக்குப் பயிற்சி அளிக்க வேண்டும் என்ற இலக்குடன் ஆரம்பித்து இன்று 13 இலட்சம் இளைஞர்களுக்கு இலக்கை தாண்டி பயிற்சி அளிக்கிறோம் என்றும் தமிழ்நாட்டை தேடி வரும் வெளிநாட்டு நிறுவனங்களின் எண்ணிக்கை தினம் தினம் அதிகரித்து வருகிறது என்றும் ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ் 1200 பேருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

**‘நான் முதல்வன்’ திட்டத்தில் பயிற்சி பெற்று தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பை பெற்ற மாணவ மாணவிகள் ஆயிரத்து 200 பேருக்கு பணி நியமன ஆணைகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று வழங்கினார்.**

கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது :-

‘நான் முதல்வன்’ திட்டத்தின் மூலம் வேலை வாய்ப்பு பெற்றுள்ள சுமார் 1,200 இளைஞர், இளம் பெண்களுக்கு இன்று பணி நியமன கடிதங்கள் வழங்குவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

இதற்கு முன்பு, கடந்த ஜீன் மாதம் இதே ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட வேலை வாய்ப்பு முகாமின் மூலம் வேலை வாய்ப்பினை பெற்ற ஆயிரத்து 425 இளைஞர்களுக்கு சென்னை பல்கலைக்கழகத்தில் பணி நியமன கடிதங்களை வழங்கினோம். இப்போது நான்கு மாதங்களுக்குள்ளாகவே மீண்டும், அதே மாதிரியான ஒரு சிறப்புக்குரிய நிகழ்ச்சியில் பங்கேற்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

### 1200 குடும்பத்தார் வாழ்வில் ஒளி!

இன்றைக்கு ஆயிரத்து 200 பேருக்குப் பணி நியமன கடிதங்களைக் கொடுக்கின்றோம் என்றால், இது வெறும் தனிநபர்களுக்கான பணி நியமன ஆணை கிடையாது. ஆயிரத்து 200 குடும்பங்கள் வாழ்வில், இந்த ‘நான் முதல்வன்’ திட்டம் ஒளி ஏற்றி வைத்துள்ளது என்று அர்த்தம்.

இன்றைய சூழலில் பணிவாய்ப்பு என்பது எவ்வளவு அவசியம் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். அதை உணர்ந்து இந்த வேலை வாய்ப்பை மிகச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

### முதல்வர் துவக்கிய ‘நான் முதல்வன்’ திட்டம்!

குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமே கிடைத்த கல்வியை அனைத்துத் தரப்பு மாணவர்களுக்கும் சென்றடையச் செய்தவர்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். கல்வியில் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது. நம் மாநில மாணவ மாணவர்கள் வெளிநாட்டுக்குச் சென்று படித்த காலம் போய், வெளிமாநில, வெளிநாட்டு மாணவர்கள் தமிழ்நாட்டுக்கு வந்து படிக்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கியவர்தான் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள். கல்வியில் மட்டுமின்றித் தொழில் வளர்ச்சியிலும் தமிழ்நாட்டைப் பல்வேறு உயரங்களுக்குக் கூட்டிச் சென்றவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ”நான் முதல்வன்” திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்று பல்வேறு நிறுவனங்களில் பணி நியமனம் பெற்றுள்ள 1,200 மாணவ, மாணவியருக்குப் பணி நியமன ஆணைகளை நேற்று (06.10.2023) கோட்டூர்புரத்திலுள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற விழாவில் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறைச் செயலாளர் தாரேஷ் அகமது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெ. இன்னசென்ட் திவ்யா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கலைஞரின் வழியில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசும் செயல்பட்டு வருகின்றது. அதற்கு ஒரு எடுத்துக்காட்டு தான், இந்த ‘நான் முதல்வன்’ திட்டம். படிக்கின்ற இளைஞர்கள் ஒவ்வொருவரையும் அவரவர் துறையில் முதல்வர் ஆக்க வேண்டும் என்பதற்காக, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் துவங்கி வைத்த திட்டம்தான் ‘நான் முதல்வன்’ திட்டம்.

### இலக்கை தாண்டி பயிற்சி!

இந்தத் திட்டத்தின் கீழ் ஓராண்டில் 10 இலட்சம் பேருக்குப் பயிற்சி அளிக்க வேண்டும் என்ற இலக்குடன் ஆரம்பித்து, இன்று அந்த இலக்கைத் தாண்டி 13 லட்சம் இளைஞர்களுக்கு நாம் பயிற்சி அளித்திருக்கின்றோம். ‘நான் முதல்வன்’ திட்டத்தின் மூலம் 61 ஆயிரத்து 921 பொறியியல் மாணவர்கள், வேலை வாய்ப்பை பெற்றுள்ளார்கள். இதில் அதிகபட்சமாக வருடத்திற்கு 40 லட்சம் ஊதியத்துடன் மாணவர்களுக்கு வேலை கிடைத்துள்ளது.

கலைக்கல்லூரிகளைப் பொறுத்தவரை இதுவரை 57 ஆயிரத்து 312 மாணவர்கள் வேலை வாய்ப்பை பெற்றுள்ளார்கள். இன்றைக்கு நடைபெறுகின்ற இந்த நிகழ்ச்சியில், ஆண்டு ஊதியமாக ரூபாய் 2 லட்சத்தில் தொடங்கி ரூபாய் 29 லட்சம் வரை பெறக்கூடிய வகையில் பணிநியமான கடிதங்களை உங்களுக்கு நாங்கள் வழங்கியுள்ளோம். வளர்ந்து வரும் தொழில்நுட்பத் தேவைக்கு ஏற்ப தமிழ்நாட்டு மாணவர்களுக்குத் திறன் பயிற்சிகளை வழங்கி, அதன் மூலம் வேலை வாய்ப்புகளைப் பெருக்கவே இந்த ‘நான் முதல்வன்’ திட்டம் தொடங்கப்பட்டது.

முதலில் பொறியியல் கல்லூரிகளில் மட்டுமே இந்தத் திட்டத்தின் மூலம் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதனுடைய தேவையை உணர்ந்து கலை, அறிவியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள், தொழிற்பயிற்சி நிறுவனங்கள், பள்ளிக்கூடங்கள் என அனைத்துக் கல்வி நிலையங்களுக்கும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது.

### இந்தியா முழுவதும் வரவேற்பை பெற்ற திட்டங்கள்!

முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த, ‘காலை சிற்றுண்டி திட்டம்’, ‘மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்துத் திட்டம்’, ‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’, ‘புதுமைப்பெண் திட்டம்’ ஆகியவையெல்லாம் எப்படி தமிழ்நாடு மட்டுமின்றி, இந்தியா முழுவதும் வரவேற்பைப் பெற்று வருகின்றதோ, அதுபோலவே, இந்த ‘நான் முதல்வன்’ திட்டமும் இந்தியா முழுவதும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல ‘நான் முதல்வன்’ திட்டத்தின் மூலமாக சமீபத்தில் நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்களில் `டி.சி.எஸ்’, `சேல்ஸ் ஃபோர்ஸ்’, `டி.பி.எஸ்’, `ஃபாக்ஸ்கான்’, `சதர்லேண்ட்’, `டெக் மகிந்திரா’, `அசோக் லேலாண்ட்’, `சுந்தரம் பிரேக் லைனிங்ஸ்’, `யூனிடெக்’போன்ற முன்னணி நிறுவனங்களிலிருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் பணிவாய்ப்பை பெற்றுள்ளார்கள்.

‘நான் முதல்வன்’ திட்டம் தொடங்கப்பட்டு முதலாம் ஆண்டு இறுதியில் பல்வேறு ஊர்களில் வேலை வாய்ப்பு முகாம்களும் நடத்தப்பட்டன. கல்லூரியில் மட்டுமின்றி, தனியாக பொது இடங்களிலும் முகாம்கள் அரசால் நடத்தப்பட்டன. அதிக மாணவர்கள் பயன்படும் வகையில் பல முன்னணி நிறுவனங்களுடன் இணைந்து வருடம் தோறும் இது மாதிரியான வேலை வாய்ப்பு முகாம்கள் தொடர்ச்சியாக நடத்த உள்ளோம்.

முன்னணி நிறுவனங்களில் எச்.ஆர் ரெப்பரசன்டேட்டிவ்ஸ் மற்றும் ஜாப் மார்க்கெட்ல் உள்ள முக்கிய நபர்களுடன் செய்யப்பட்ட கலந்துரையாடல் அடிப்படையில், தனியார் துறையில் உள்ள வேலைவாய்ப்புத் தகவல்கள் சேகரிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் வேலைவாய்ப்பு முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தியாவிலேயே முதன்முறையாக கல்லூரி சிலபஸில் உள்ள ஒரு பகுதியாகவே பணிவாய்ப்பைப் பெறுவதற்கான திறனை வளர்த்துக்கொள்ள சாஃப்ட் ஸ்கில்ஸ் மற்றும் எம்பிளாய்மென்ட் ஸ்கில்ஸ் சார்ந்த பயிற்சிகள்தான் ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ் கட்டணமின்றி வழங்கப்படுகின்றன.

### கல்லூரிகளில் மென் திறன் பயிற்சி!

பிரபலமான கல்லூரிகள் முக்கிய நகரங்களில் உள்ள கல்லூரிகள் மட்டுமில்லாமல், தமிழ்நாட்டில் உள்ள சிறு நகரங்கள் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் உள்ள கல்லூரிகளிலும் இந்த மென் திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

எதிர்காலத்தில் எந்த மாதிரியான வேலைவாய்ப்புகள் உருவாகும் என்பதை அறிந்துகொள்ள தொழில் துறை மற்றும் கல்வி நிறுவனங்களின் கூட்டுச் செயல்பாடுகள், இண்டஸ்ட்ரி அகாடமி ஆஃப் கொலாபரேஷன் மிக மிக அவசியம். எனவேதான் தொழில் நிறுவனங்கள், துறைசார்ந்த வல்லுநர்கள், உயர்கல்வி நிறுவனங்கள் போன்ற துறை சார்ந்த அமைப்புகளின் ஆலோசனைப்படி ‘நான் முதல்வன்’ திட்டத்திற்கான பாட முறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இன்றைய சூழலில் வேலைவாய்ப்பை தரக்கூடிய ஆர்ட்டிஃபிஷியல் இன்டெலிஜென்ஸ், ஃபின் டெக், பிக் டேட்டா, மெட்டா வெர்ஸ், டெக்ஸ்டைல் டெக்னாலஜி, ஃபுட் ப்ரிசர்வேஷன் டெக்னாலஜி, டூரிசம் மற்றும் ஹாஸ்பிட்டாலிட்டி போன்ற துறை சார்ந்த பாடத்திட்டங்கள் உங்களுக்குப் பெரிதும் பலன் அளித்துள்ளன.

### வெளிநாட்டு நிறுவனங்கள் வருகை அதிகரிப்பு!

இத்தகைய முயற்சியால் முதலீடு செய்வதற்காக தமிழ்நாட்டைத் தேடி வரும் வெளிநாட்டு நிறுவனங்களுடைய எண்ணிக்கை தினம் தினம் அதிகரித்துள்ளன. குறிப்பாக அந்நிறுவனங்கள் தமிழ்நாட்டை ஸ்கில்டு வொர்க் ஃபோர்ஸை கொண்ட மாநிலமாகப் பார்க்கின்றனர் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எந்தெந்த துறையில் என்னென்ன வாய்ப்புகள் உள்ளன என்பது தொடர்பாக நம்முடைய இளைஞர்களுக்கு வழிகாட்டுவதற்காக டி.சி.எஸ் அயான் நிறுவனத்துடன் இணைந்து ஓர் உயர்கல்வி வழிகாட்டுதல் திட்டத்தைச் செயல்படுத்த இன்றைய தினம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

டி.சி.எஸ்அயான் நிறுவனத்துடன் இணைந்து தமிழ்நாடு அரசு இன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்வதன் மூலம் ‘நான் முதல்வன்’ திட்டம் செயல்படுத்தப்படும் ஒவ்வொரு கல்லூரியிலும் அந்தந்தப் படிப்புகளுக்கேற்ற திறன் படிப்புகள் கண்டறியப்பட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன. அரசுத் துறையில் வேலைவாய்ப்பினை வழங்கவும், ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### பயிற்சி மாணவர்களுக்கு ஊக்கத்தொகை!

குறிப்பிட்டு சொல்ல வேண்டுமென்றால் தமிழ்நாட்டு இளைஞர்கள் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், ஐ.எஃப்.எஸ், ஐ.ஆர்.எஸ் போன்ற ஒன்றிய அரசுப் பணிகளுக்கு வரவேண்டும் என்பதற்காக, ‘நான் முதல்வன்’ போட்டித் தேர்வுப் பயிற்சிகளை கடந்த ஜீன் மாதம் தொடங்கினோம். மேலும் தமிழ்நாடு அரசு நடத்துகின்ற திறன் மதிப்பீட்டுத் தேர்வில் வெற்றி பெறுகின்ற ஆயிரம் மாணவர்களுக்கு 10 மாதங்களுக்கு தலா 7 ஆயிரத்து 500 ரூபாய் ஊக்கத் தொகையும் வழங்கப்பட உள்ளன.

இப்படி தமிழ்நாட்டு இளைஞருடைய வேலை வாய்ப்பை பெருக்க முதலமைச்சர் அவர்கள் உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். அதன் பலனாக இன்றைக்குப் பணி நியமன கடிதங்களைப் பெற்றுள்ள உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துகளையும், என்னுடைய பாராட்டுகளையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய தினம் பணியாளராக வேலைக்குச் செல்லவிருக்கும் நீங்கள் எதிர்காலத்தில் தொழில் முனைவோராக மாறி, மற்றவர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்க வேண்டும். வாழ்வில் வெற்றி பெற வேண்டும் என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி சிறப்புத்திட்ட செயலாக்கத்துறையின் செயலாளர் மருத்துவர் தாரேஷ் அகமது ஐ.ஏ.எஸ்., திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் இன்னசன்ட் திவ்யா ஐ.ஏ.எஸ்., ‘நான் முதல்வன்’ திட்டத்தின் முதன்மை செயலர் அலுவலர் ஜெயப்பிரகாஷ், ‘போட்டித் தேர்வுகள் பிரிவு’ன் மிஷன் டைரக்டர் சுதாகர், இந்திய தொழில் கூட்டமைப்பின் தமிழ்நாடு தலைவர் சங்கர் வானவராயர் ஆகியோர் கலந்துகொண்டனர். முன்னதாக பணிநியமன ஆணைகளை பெற்ற மாணவமாணவிகள் ‘நான் முதல்வன்’ திட்டத்தில் பயிற்சி பெற்று வேலைவாய்ப்பினை பெற்ற தங்களின் அனுபவங்களை பகிர்ந்துகொண்டனர்.


சென்னை தெற்கு மாவட்ட இலக்கிய அணி
சார்பில்
முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்
அவர்களின்
நூற்றாண்டு விழாவை முன்னிட்டு
ஐந்தமிழ் அறிஞர் கலைஞரின் காவியங்களை ஆராயும் இலக்கிய அரங்கம்

நாள்: 07.10.2023 சனிக்கிழமை
மாலை 5.00 மணி
இடம்: சுகன்யா திருமண மண்டபம்
நீலாங்கரை, சென்னை-41






தலைமை: கொட்டிவாக்கம் எம்.பார்த்திபன்
மாவட்ட அமைப்பாளர் - இலக்கிய அணி

முன்னிலை: ச.அரவிந்த்ரமேஷ் M.L.A
சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர்

வி.இ.மதியழகன் MC பாலவாக்கம் த.விஸ்வநாதன் MC
பாலவாக்கம் மு.மனோகரன் எஸ்.வி.ரவிசந்திரன் MC

தலைப்பு: ஐந்தமிழ் அறிஞரின் காவியங்களை ஆராயும் இலக்கிய அரங்கம்
தொல்காப்பியப் பூங்கா ♦ சங்கத்தமிழ் ♦ குறளோவியம்

பங்கேற்போர்:
முனைவர் பொற்கோ
மேனாள் துணை வேந்தர் - சென்னைப் பல்கலைக்கழகம்
முனைவர் இ.சுந்தரமூர்த்தி
மேனாள் துணை வேந்தர் - தமிழ்ப் பல்கலைக்கழகம்
பேராசிரியர் தி.ராஜகோபாலன்
கவிஞர் சி.இராஜேந்திரன்

நெறியாளுகை: கவிஞர் சொற்கோ கருணாநிதி

இலக்கிய அரங்கத்தை துவக்கி வைப்பவர்:
மாண்புமிகு மா.சுப்பிரமணியன் B.A.LLB.,
மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் - சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர்

புலவர் இந்திரகுமாரி
மாநில இலக்கிய அணி தலைவர்
வி.பி.கலைராஜன்
மாநில இலக்கிய அணி செயலாளர்
முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் MP
தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்

மு.மகேஷ்குமார்
சென்னை மாநகராட்சி துணை மேயர்
காரம்பாக்கம் க.கணபதி
மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர்
AMV.பிரபாகர்ராஜா
விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர்

க.சோமு க.தனசேகரன் MC காசிமுத்து மாணிக்கம் பெ.மணிமாறன் MC எஸ்.குணசேகரன் பா.வாசுகிபாண்டியன் எஸ்.பாஸ்கர் MC ரத்னா லோகேஸ்வரன் MC



சென்னை தெற்கு மாவட்ட இலக்கிய அணி


நாள் : 07.10.2023
சனிக்கிழமை காலை 9.30 மணி
இடம் : கலைஞர் அறிவாலயம்,
திருச்சி.
தி.மு.க. மகளிர் அணி
மற்றும் மகளிர் தொண்டரணி
மாவட்ட புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்
நிர்வாகிகளை அறிமுகப்படுத்தி சிறப்புரையாற்ற வருகை தரும்
திருமதி. கனிமொழி கருணாநிதி எம்.பி.
அவர்களை வருக. வருக.. என வரவேற்கிறோம்..
அழைத்து மகிழும்
திருச்சி வடக்கு மற்றும் மத்திய மாவட்ட மகளிர் அணி
ARASU ARTS


அக்டோபர் – 7ல்
அன்பு மகன்
ஜெ.வசந்த் B.E.,
அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு
58வது வட்ட திமுக சார்பாக
10000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா
நேரம் : காலை 9 மணி
இடம் : புனித பிரிட்டோ மேல்நிலைப்பள்ளி
மேலப்பொன்னகரம் 2வது தெரு, மதுரை.
விழாவிற்கு வருகை தரும்
மாண்புமிகு. P.மூர்த்தி B.A.,
வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர், மதுரை வடக்கு மாவட்ட கழக செயலாளர்
உயர்திரு. கோ.தளபதி MLA
மதுரை மாநகர் மாவட்ட கழக செயலாளர்
உயர்திரு. மு.மணிமாறன்
மதுரை தெற்கு மாவட்ட கழக செயலாளர்
வருக! வருக!
அன்புடன் அழைக்கும் : மா.ஜெயராம் M.A.,MC
தலைமை செயற்குழு உறுப்பினர்
SM FLEX

# தி.மு.க. மகளிர் அணி & மகளிர் தொண்டர் அணி



## புதிய மாவட்ட நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்



**தலைமை**

திருமிகு. **கனிமொழி கருணாநிதி** எம்.பி.,
கழக துணைப் பொதுச்செயலாளர்

**வரவேற்புரை**

திருமிகு. **பவானி ராஜேந்திரன்** EX.எம்.பி.,
மகளிர் அணி துணைச் செயலாளர்

**சிறப்புரை**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் & குடிநீர் வழங்கல் துறை அமைச்சர்
திரு. **கே.என்.நேரு**
கழக முதன்மைச் செயலாளர்

**முன்னிலை**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்
திரு. **அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர்

மாண்புமிகு ஆதி திராவிடர் & பழங்குடியினர் நலத்துறை அமைச்சர்
திருமிகு. **என். கயல்விழி செல்வராஜ்**
மகளிர் அணி துணைச் செயலாளர்

திரு. **ந.தியாகராஜன்** எம்.எல்.ஏ.,
திருச்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர்

திரு. **க.வைரமணி**
திருச்சி மத்திய மாவட்டக் கழகச் செயலாளர்

திருச்சி மாநகர மேயர்
திரு. **மு.அன்பழகன்**
திருச்சி மேற்கு மாநகரச் செயலாளர்

திருமிகு. **தமிழரசி ரவிக்குமார்** எம்.எல்.ஏ.,
மகளிர் தொண்டர் அணி இணைச் செயலாளர்

திருமிகு. **குமரி விஜயகுமார்**
மகளிர் அணி இணைச் செயலாளர்

திரு. **மு.மதிவாணன்**
திருச்சி கிழக்கு மாநகரச் செயலாளர்

**வாழ்த்துரை**

திருமிகு. **விஜயா தாயன்பன்**
மகளிர் அணித் தலைவர்

திருமிகு. **ஹெலன் டேவிட்சன்** EX.எம்.பி.,
மகளிர் அணிச் செயலாளர்

திருமிகு. **நாமக்கல் ராணி**
மகளிர் தொண்டர் அணிச் செயலாளர்

திருமிகு. **ரத்னா லோகேஸ்வரன்** எம்.சி.,
மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர்

**நன்றியுரை**

திருமிகு. **அமலு** எம்.எல்.ஏ.,
மகளிர் அணி பிரச்சாரக்குழு செயலாளர்

நாள்: 07-10-2023, சனிக்கிழமை காலை 9:30 மணி

இடம் : கலைஞர் அறிவாலயம், 21, கரூர் புறவழிச்சாலை, சத்திரம் பேருந்து நிலையம் அருகில், திருச்சி - 620002

அனைவரும் வாரீர் – அன்போடு அழைக்கின்றோம்.

தி.மு.க.மகளிரணி, மகளிர் தொண்டரணி, பிரச்சாரக்குழு, சமூக வலைதளக்குழு, ஆலோசனைக்குழு


---

# தமிழினத் தலைவர் கலைஞர்

அவர்களின்

## நூற்றாண்டு விழாவினையொட்டி

**தி.மு.க.சட்டத்துறையின்** சார்பில்







சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும்
மூன்று ஆண்டுகளுக்குட்பட்ட
இளம் வழக்கறிஞர்களுக்கான
பேச்சு போட்டி

நாள்: 07.10.2023
இடம்: அரசு சட்டக்கல்லூரி,பாளையங்கோட்டை.
திருநெல்வேலி
நாள்: 08.10.2023 இடம்: எல்.எஸ்.திருமண மஹால்,
அரசு சட்டக்கல்லூரி அருகில்,பாளையங்கோட்டை.
திருநெல்வேலி

1, கலைஞரின் பார்வையில் சமூக நீதி
2, கலைஞரின் பார்வையில் மாநிலசுயாட்சி
3, கலைஞரின் பார்வையில் மகளிர் முன்னேற்றம்
4, கலைஞரின் பார்வையில் தொழில் வளம்
5, கலைஞரின் பார்வையில் கல்வி

பரிசுகள் வழங்கி விழா சிறப்புரை

**என்.ஆர்.இளங்கோ** எம்.ஏ.,பி.எல்.,
சட்டத்துறை செயலாளர்

**டி.பி.எம்.மைதீன்கான்**
திருநெல்வேலி மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர்

பேச்சுப் போட்டி ஒருங்கிணைப்பாளர்கள்

**கே.எஸ்.இரவிச்சந்திரன்**
சட்டத்துறை இணைச்செயலாளர்

**ஜெ.பச்சையப்பன்**
சட்டத்துறை துணைச்செயலாளர்

**கே.சந்துரு**
சட்டத்துறை துணைச்செயலாளர்

**கே.ஜே.சரவணன்**
தலைமை கழக வழக்கறிஞர்

**எம்.காமினிதேவன்** எம்.ஏ.,பி.எல்.,
மாவட்ட அமைப்பாளர், திருநெல்வேலி மத்திய மாவட்ட வழக்கறிஞர் அணி

**எஸ்.ராஜா முஹம்மது** எம்.ஏ.,பி.எல்.,
மாவட்ட தலைவர், திருநெல்வேலி மத்திய மாவட்ட வழக்கறிஞர் அணி

திருநெல்வேலி மத்திய மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி

கழக மாநில விவசாய அணி துணைச் செயலாளர்

# டி.எம்.அரியப்பன் - சாந்தி அரியப்பன் இல்லத் திருமண வரவேற்பு!

## அமைச்சர் பெருமக்கள்-கழக முன்னணியினர் வாழ்த்துகின்றனர்!

கிருஷ்ணகிரி, அக் 7-

கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலம் ஒன்றியம், இராயக்கோட்டை ஊராட்சி, போடம்பட்டி கிராமம், கழக மாநில விவசாய அணி துணைச் செயலாளர் டி.எம்.அரியப்பன் - திருமதி. சாந்தி அரியப்பன் ஆகியோரின் புதல்வர் அ. அன்பானந்தம், கிருஷ்ணகிரி மாவட்டம், தொட்டபூவந்தி ஊராட்சி, குருதட்டனூர் கிராமம், ஜி.வெங்கடசாமி - திருமதி.ஜானகி ஆகியோரின் புதல்வி வெ.சொர்ணப்பிரியா ஆகியோரது மணவிழாவை 20.8.2023 அன்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது இல்லத்தில் நடத்தி வைத்தார்.



மணமக்கள் அ.அன்பானந்தம் - வெ.சொர்ணப்பிரியா ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி 8.10.2023 ஞாயிறு காலை 11 மணியளவில் கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஸ்ரீதேவராஜ் மஹாலில் நடைபெறுகிறது.

மணவிழா வரவேற்பு நிகழ்ச்சிக்கு அமைச்சர்கள் அர.சக்கரபாணி, எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் ஆகியோர் தலைமை தாங்குகின்றனர்.

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ., கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் டி.மதியழகன் எம்.எல்.ஏ. ஆகியோர் வரவேற்கின்றனர்.

அமைச்சர்கள் சு.முத்துசாமி, மு.பெ.சாமிநாதன், எஸ்.எஸ்..சிவசங்கர், கீதா ஜீவன் மற்றும் ஏ.கே.எஸ். விஜயன், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி பொதுச் செயலாளர் இ.ஆர்.ஈஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

அமைச்சர்கள் கே.என். நேரு, ஐ.பெரியசாமி, எ.வ. வேலு, தங்கம் தென்னரசு, கே.ஆர்.பெரியகருப்பன், ஆர்.காந்தி மற்றும் ஆ.ராசா எம்.பி., அரசு கொறடா கோ.வி.செழியன், ஆர்.எஸ். பாரதி, அன்பகம் கலை, டாக்டர் டி.என்.வி.எஸ். செந்தில்குமார், டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி., டி.இராமச்சந்திரன், கோ.க.மணி, கோ. வேந்தன், தங்கம் பெ.சுப்பிரமணி, முனைவர் பி.பழனியப்பன், டி.செங்குட்டுவன், இ.ஜி.சுகவனம், எம்.வி. வெற்றிச்செல்வன், டாக்டர். காஞ்சனா கமலநாதன், ஆர். சின்னசாமி, வி.ஜி.கோவிந்தசாமி, பி.முருகன், எஸ்.ஏ. சத்யா, ஆர்.எஸ்.சீனிவாசன், மணிமேகலை நாகராஜ், பி.டி.அன்பரசன், பி.டி. விஜயகுமார், அ.யுவராஜ், தா.சுகுமாரன், கே.வி.எஸ். சீனிவாசன், டி.சுமன் ஆகியோர் வாழ்த்துகின்றனர்.

டி.எம்.அரியப்பன் - சாந்தி அரியப்பன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

சென்னை மாநகராட்சியில்

# மக்களைத் தேடி மேயர் சிறப்பு முகாம்!

## பொதுமக்களிடமிருந்து மேயர் பிரியா மனுக்களைப் பெற்றார்!

சென்னை, அக்.7-

பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் அவர்களின் 202324ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் பொதுமக்களின் குறைகளை கண்டறிந்து, அவற்றின் மீது உடனடி தீர்வு காணும் வகையில், மக்களைத் தேடி மேயர் என்ற திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என அறிவித்தார்.

மேயர் திருமதி.ஆர். பிரியா அவர்களின் அறிவிப்பின்படி, மக்களைத் தேடி மேயர் சிறப்பு முகாமானது 03.05.2023 அன்று மண்டலம்5க்குட்பட்ட பொதுமக்களிட மிருந்தும், 31.05.2023 அன்று மண்டலம்6க்குட்பட்ட பொதுமக்களிடமிருந்தும், 05.07.2023 அன்று மண்டலம் 13க்குட்பட்ட பொதுமக்களிடமிருந்தும், 10.08.2023 அன்று மண்டலம்1க்குட்பட்ட பொதுமக்களிடமிருந்தும் பெறப்பட்ட கோரிக்கைகள் மீது மாண்புமிகு மேயர் அவர்களால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தீர்வு காணப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, மக்களைத் தேடி மேயர் திட்டத்தின் கீழ், அம்பத்தூர் மண்டலம், கொரட்டூர், சுவாதி பேலஸில் மேயர் திருமதி ஆர்.பிரியா நேற்று (06.10.2023) அம்பத்தூர் மண்டலத்திற்குட்பட்ட பொதுமக்களிடமிருந்து 474 கோரிக்கை மனுக்களை நேரடியாகப் பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டார்.

இந்தச் சிறப்பு முகாமில் பொதுமக்களிடமிருந்து சாலை வசதி, பள்ளிக் கூடத்தில் கட்டட வசதி, சமுதாயக் கூடம் மேம்பாடு, மழைநீர் வடிகால் வசதி, குடியிருப்பு வசதி, பிறப்பு/ இறப்பு சான்றிதழ் உள்ளிட்ட 474 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன. பெறப்பட்டுள்ள கோரிக்கை மனுக்கள் மீது தொடர்புடைய துறைகள் வாயிலாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தீர்வு காணப்படும். இந்நிகழ்வினை யொட்டி, சிறப்பு மருத்துவ முகாம் நடத்தப்பட்டு பொதுமக்களுக்கு மருத்துவப் பரிசோதனை மற்றும் சிகிச்சை வழங்கப்பட்டது. மேலும், டெங்கு விழிப்புணர்வு கண்காட்சியும் நடத்தப்பட்டது.

இந்த சிறப்பு முகாமில் 25 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து உணவுப் பெட்டகங்களையும், அம்பத்தூர் வட்டத்திற்குட்பட்ட 12 பயனாளிகளுக்கு வீட்டுமனைக்கான பட்டாக்களையும் மேயர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜோசப் சாமுவேல் (அம்பத்தூர்), காரம்பாக்கம் கா. கணபதி (மதுரவாயல்), துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், மத்திய வட்டார துணை ஆணையாளர் எஸ். ஷேக் அப்துல் ரஹ்மான், மண்டலக்குழுத் தலைவர்கள் பி.கே.மூர்த்தி (அம்பத்தூர்), கூ.பி.ஜெயின் (அண்ணாநகர்), நிலைக்குழுத் தலைவர் (சுகாதாரம்) டாக்டர் கோ.சாந்தகுமாரி, மண்டல அலுவலர் திருமதி டி. விஜிலா, மாமன்ற ஆளுங்கட்சித் துணைத் தலைவர் டி.எஸ்.பி. இராஜகோபால், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி உள்ளிட்ட தொடர்புடைய துறைகளின் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி - மதுரை - கோவை - திருச்சி - வேலூரில்

# வர்த்தகர் அணி சார்பில் கலை நிகழ்ச்சிகள் - விழா குழுக்கள் அமைப்பு!

## வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்து மாணிக்கம் அறிவிப்பு!

சென்னை, அக். 7-

கழக வர்த்தகர் அணி நிர்வாகிகளுக்கு அணிச் செயலாளர் கவிஞர் காசி முத்து மாணிக்கம் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

தலைமை கழகத்தால் ஏற்கனவே அறிவித்தபடி தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட 5 இடங்களில் (தூத்துக்குடி, மதுரை. கோவை, திருச்சி. வேலூர்)

கலை இரவு நமது வர்த்தகர் அணி நடத்த இருக்கிறது.

தமிழர்களின் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளான பறை ஆட்டம். சிலம்பாட்டம், கோலாட்டம், வில்லுப் பாட்டு, நாடகங்கள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்திடவும். சிறப்பு விருந்தினர்களாக கலைத் துறை சார்ந்த சான்றோர்களை அழைத்து. பாரம்பரிய கலைஞர்களை கௌரவிக்கவும். இந்த நிகழ்ச்சிகள் குறித்து விளம்பரங்களை சுவரொட்டிகள். பதாகைகள், செய்தித்ததாள் விளம்ப ரங்கள் மற்றும் துண்டு பிரசுரங்கள் செய்திடவும், மழை காலம் என்பதால் ஆங்காங்கே பிரமாண்ட மான மண்டபங்களில் நடத்திடவும். கடந்த 25-08-2023-ல் நடைபெற்ற மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் முடிவு எடுத்தபடி, கீழ்கண்டவாறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

5 இடங்களுக்கு செல்ல வேண்டிய தோழர்களின் மாவட்ட பட்டியலும் அறிவிக்கப்பட்டுள்ளது. வாகனம் நிறுத்திட, உணவு வசதிகள் உள்பட, எந்த இடங்கள் என்பது பின்பு அறிவிக்கப்படும். ஒத்துழைப்பு நல்கிட வேண்டுகிறோம்.

**தூத்துக்குடி**

தலைவர் : உமரிச்சங்கர் திருச்சந்தூர், செல் : 63833 46188. து.தலைவர் : தாமரை பாரதி, செல்: 894431 82605. செயலாளர்கள் : பி.ஆர். முத்துசாமி, த. வனராஜ். செல்: 894433 23239

**மதுரை**

தலைவர்: தனசெல்வம், மதுரை. செல் : 82202 35050. து.தலைவர் : மாலை ராஜா, நெல்லை, செல் : 94889 27474. செயலாளர்: முத்து செல்வி. செல் : 89257 97151. இராமநாதபுரம் இராமர், செல் : 9443323239

**திருச்சி**

தலைவர்: வி.ஜெயன், செல்: 9443631060

**திண்டுக்கல்**

கௌவரத்தலைவர் : கோ. வி.செழியன், அரசு கொறடா. து.தலைவர்: பழஞ்சூர் செல்வம், செல்: 6379767210. செயலாளர்கள் : புதுக்கோட்டை அசோக்பாண்டியன். செல் : 9443227095, வேப்பூர் பெரியசாமி, செல் : 9787195637

**கோவை**

தலைவர்: நா.முருக வேல், கோவை. செல் : 98422 32888. து.தலைவர்: நாமக்கல் K.S.மூர்த்தி, செல் : 99432 31199. செயலாளர்கள் : தர்ம செல்வன், தர்மபுரி - 94888 82000, கென்னடி (ஆத்தூர் சென்னை), செல்: 94432 27095. குளித்தலை பல்லவி ராஜா, செல் : 99655 49098

**வேலூர்**

தலைவர் : தர்மபுரி சத்திய மூர்த்தி, செல் : 94437 779390. து.தலைவர்கள்: ராமகிருஷ்ணன், காஞ்சி, செல் : 94432 27188. சுந்தரவரதன். காஞ்சி, செல் : 94433 15444. செயலாளர்கள்: மீஞ்சூர் பாஸ்கர், செல்-94405 1500, ராயபுரம் பாண்டி செல்வம், செல் : 77080 66077 திருவல்லிக் கேணி வி.பி.மணி, செல் : 87789 92424

**மதுரை**

மதுரை மாநகர் - மதுரை தெற்கு மதுரை வடக்கு விருதுநகர் வடக்கு - விருதுநகர் தெற்கு சிவகங்கை - இராமநாதபுரம் - தேனி வடக்கு - தேனி தெற்கு திண்டுக்கல் மேற்கு - திண்டுக்கல் கிழக்கு நாமக்கல்

**தூத்துக்குடி**

நெல்லை மத்தியம் - நெல்லை கிழக்கு தென்காசி வடக்கு - தென்காசி தெற்கு, கன்னியாகுமரி கிழக்கு - கன்னியாகுமரி மேற்கு

**திருச்சி**

திருச்சி மத்தியம் - திருச்சி வடக்கு - திருச்சி தெற்கு, தஞ்சை வடக்கு - தஞ்சை தெற்கு - தஞ்சை மத்தியம், மயிலாடுதுறை - நாகப்பட்டினம் - திருவாரூர் கடலூர் கிழக்கு -கடலூர் மேற்கு, அரியலூர் - பெரம்பலூர், புதுக் கோட்டை தெற்கு - புதுக் கோட்டை வடக்கு, விழுப்புரம் வடக்கு - விழுப்புரம் தெற்கு கள்ளக்குறிச்சி வடக்கு - கள்ளக்குறிச்சி தெற்கு

**கோவை**

சேலம் மத்தியம் - சேலம் கிழக்கு - சேலம் மேற்கு, கோவை வடக்கு - கோவை தெற்கு - கோவை மத்தியம் கரூர் - ஈரோடு கிழக்கு - ஈரோடு மேற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு - கிருஷ்ணகிரி மேற்கு தர்மபுரி கிழக்கு - தர்மபுரி மேற்கு -நீலகிரி, திருப்பூர் தெற்கு - திருப்பூர் வடக்கு

**வேலூர்**

வேலூர் - ராணிப் பேட்டை - (வேலூர்) திருப்பத்தூர், காஞ்சிபுரம் தெற்கு காஞ்சிபுரம் வடக்கு - சென்னை தெற்கு, சென்னை வடக்கு சென்னை வடகிழக்கு - சென்னை கிழக்கு, சென்னை மேற்கு சென்னை தென்மேற்கு, திருவள்ளூர் மேற்கு - திருவள்ளூர் கிழக்கு - திருவள்ளூர் மத்தியம் திருவண்ணாமலை வடக்கு - திருவண்ணாமலை தெற்கு

இவ்வாறு வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்து மாணிக்கம் தெரிவித்துள்ளார்.



திருவள்ளூர் அடுத்த ஐ.சி.எம்.ஆர். திடலில் தமிழ்நாடு முதலமைச்சர் – கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ள வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) மண்டல மாநாடு பயிற்சிப் பாசறை கூட்டத்திற்கான இடத்தை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ முன்னிலையில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி, கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை இடத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். உடன் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், மாநில மாவட்ட நிர்வாகிகள் கே.திராவிட பக்தன், ஆர்.டி.இ.ஆதிசேசன், டாக்டர் வி.சி.ஆர்.குமரன், உதயமலர் பாண்டியன், ஜெயபாரதி, ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதம் உள்பட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர் கள் அணிகளின் அமைப்பாளர்கள் – துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் பலர் உள்ளனர்.




# செயிண்ட் கோபைன் தொழில் நிறுவன விரிவாக்கம்!

# தமிழ்நாட்டில் நல்லாட்சிக்கான அத்தாட்சி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.10.2023) சென்னையில், செயிண்ட் கோபைன் நிறுவனத்தின் தலைவர் பியரி ஆன்ட்ரி டி சேலண்டர் (Pierre-Andre de Chalendar), தலைமை செயல் அலுவலர் பெனாய்ட் பாசின் (Benoit Bazin) உள்ளிட்ட செயிண்ட் கோபைன் நிறுவனத்தின் உலகளாவிய நிர்வாக இயக்குநர்கள் குழுவினரை சந்தித்து கலந்துரையாடினார். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண்ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் வே.விஷ்ணு ஆகியோர் உடனிருந்தனர்.

சென்னை, அக். 7-

**தமிழ்நாட்டில் செயிண்ட் கோபைன் நிறுவனம் விரிவாக்கம் செய்து வருவதற்கு, இங்குள்ள நல்லாட்சி மற்றும் சிறப்பான முதலீட்டுச் சூழலே அத்தாட்சியாக கருதுகிறேன் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.10.2023) சென்னையில், பிரான்ஸ் நாட்டின் செயிண்ட் கோபைன் (Saint Gobain) நிறுவனத்தின் உலகளாவிய நிர்வாக இயக்குநர்கள் குழுவினரை சந்தித்து ஆற்றிய உரை வருமாறு:-

I welcome all the Directors of Saint Gobain's Global Board to the beautiful city of Chennai.

தமிழ்நாட்டிற்கும் செயிண்ட் கோபைன் நிறுவனத் திற்குமான உறவு ஏறத்தாழ 25 ஆண்டு வரலாறு கொண்டது. 1998ஆம் ஆண்டு ஜனவரி மாதம், திருப்பெரும்புதூரில் இந்நிறுவனத்திற்கான அடிக்கல் நாட்டி வைத்தவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

தமிழ்நாட்டில், திருப்பெரும்புதூர், பெருந்துறை மற்றும் திருவள்ளூர் ஆகிய இடங்களில், செயிண்ட் கோபைன் நிறுவனம் பல்வேறு தொழில் திட்டங்களை நிறுவி, இதுகாறும் ஏறத்தாழ 5000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 5000 நபர்களுக்கு வேலை வாய்ப்பும் அளித்துள்ளது. தனது ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தையும் சென்னையில் அமைத்துள்ளது.

கடந்த ஆண்டு மார்ச் 9 அன்று, திருப்பெரும்புதூர் செயிண்ட் கோபைன் நிறுவனத்தில் மிதவைக் கண்ணாடிப் பிரிவு, ஒருங்கிணைந்த ஜன்னல் பிரிவு, நகர்ப்புற வனம் ஆகியவற்றைத் தொடங்கி வைத்துப் பார்வையிட்டேன் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தற்போது செயிண்ட் கோபைன் நிறுவனம், ஒரகடத்தில் ஒரு புதிய உற்பத்தித் திட்டமும், திருப்பெரும்புதூர், பெருந்துறை மற்றும் திருவள்ளூர் திட்டங்களில் விரிவாக்கமும் மேற்கொள்ள உள்ளது. இம்மாநிலத்தில் நல்லாட்சி மற்றும் சிறப்பான முதலீட்டுச் சூழல் அமைந்திருப்பதற்கான அத்தாட்சியாகவே நான் கருதுகிறேன்.

> **சுமார் 3400 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 1150 நபர்களுக்கு வேலை வாய்ப்பு என்று மேற்கொள்ளப்படும் இத்திட்டத்திற்கான அனைத்து உதவிகளும் தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்படும்.**

சுமார் 3400 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 1150 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்று மேற்கொள்ளப்படும் இத்திட்டத்திற்கான அனைத்து உதவிகளும் தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்படும் என்று நான் உறுதியளிக்கிறேன்.

உங்களது தொழில் முயற்சிகள் வெற்றி பெற எனது மனமார்ந்த வாழ்த்துகள். உங்கள் அனைவரையும் சென்னையில் சந்தித்தது மிக்க மகிழ்ச்சி.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இக்கூட்டத்தில், செயிண்ட் கோபைன் நிறுவனத்தின் தலைவர் பியரி ஆன்ட்ரி டி சேலண்டர் (Mr. PierreAndre de Chalendar), தலைமைச் செயல் அலுவலர் பெனாய்ட் பாசின் (Mr. Benoit Bazin) உள்ளிட்ட செயிண்ட் கோபைன் நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுவினர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண்ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு ஆகியோர் உடனிருந்தனர்.

### வள்ளலார் விழாவில் ஆளுநரின் பேச்சு!

## வேண்டாத வேலைகளை விட்டுவிட்டு உருப்படியாக யோசிப்பது நல்லது!

### “தீக்கதிர்” நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, அக்.7-

வடலூரில் நடைபெற்ற வள்ளலார் விழாவில் ஆளுநர் ஆர்.என்.ரவி சர்ச்சைக்குரிய வகையில் பேசியுள்ளார். இத்தகைய வேண்டாத வேலைகளை விட்டுவிட்டு ஆளுநர் உருப்படியாக யோசிப்பது நல்லது என ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:-


தீக்கதிர்

2023 அக்டோபர் 6 வெள்ளிக்கிழமை

வள்ளலார் விழாவும், ஆளுநர் சேட்டையும்

வள்ளலார் என்றழைக்கப்பட்ட இராம லிங்க அடிகளாரின் 200ஆவது ஆண்டு நிறைவு பெற்றுள்ளது. இதையொட்டி கடந்த ஓராண்டாக தமிழ்நாடு அரசு பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வந்துள்ளது. வள்ளலாரின் கொள்கைகளைப் பரப்பும் பல்வேறு திட்டங்களை மாநில அரசு அறிவித்துள்ளது வரவேற்கத்தக்கது.

வள்ளலாரின் முக்கியமான பாடல்கள் மற்றும் கருத்துக்களைத் தொகுத்து இந்தி உள்ளிட்ட இந்தியாவின் அனைத்து மொழிகளிலும் வெளியிட வேண்டும். ஆங்கிலம் உள்ளிட்ட அயல்நாட்டு மொழிகளிலும் வெளியிடுவதன் மூலம் வள்ளலாரை உலக மக்கள்

வள்ளலார் என்றழைக்கப்பட்ட இராம லிங்க அடிகளாரின் 200ஆவது ஆண்டு நிறைவு பெற்றுள்ளது. இதையொட்டி கடந்த ஓராண்டாக தமிழ்நாடு அரசு பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வந்துள்ளது. வள்ளலாரின் கொள்கைகளைப் பரப்பும் பல்வேறு திட்டங்களை மாநில அரசு அறிவித்துள்ளது வரவேற்கத்தக்கது.

வள்ளலாரின் முக்கியமான பாடல்கள் மற்றும் கருத்துக்களைத் தொகுத்து இந்தி உள்ளிட்ட இந்தியாவின் அனைத்து மொழிகளிலும் வெளியிட வேண்டும். ஆங்கிலம் உள்ளிட்ட அயல்நாட்டு மொழிகளிலும் வெளியிடுவதன் மூலம் வள்ளலாரை உலக மக்கள் புரிந்து கொள்ள முடியும். திருக்குறளை பல்வேறு மொழிகளில் மொழி பெயர்த்து வெளியிட்டதால் தான் அதன் பெருமையை உலகமறிந்தது.

வடலூரில் நடைபெற்ற விழாவில் பங்கேற்றுப் பேசிய ஆளுநர் ஆர்.என். ரவி வள்ளலார் சனாதனத்தின் உச்சம் என்று கூறி அவரை இழிவு படுத்தினார். இதற்கு தமிழறிஞர்கள் மத்தியிலிருந்து மட்டுமல்ல, வள்ளலாரின் சமரச சுத்த, சன்மார்க்க நெறியை பின்பற்று பவர்களிட மிருந்தும் கடும் எதிர்ப்பு எழுந்தது. சாதி, மத வேறுபாடுகளையும், பெண்ணடிமைத் தனத்தையும், மூட நம்பிக்கைகளையும் கடுமையாகச் சாடியவர் வள்ளலார். அதற்கு நேர் எதிரான முகாமிலிருக்கும் ஆளுநர் வள்ளலாரை மீண்டும் சீண்டியுள்ளார்.

“வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடினேன்” என்ற வள்ளலாரின் பாடல் தான் சனாதனத்தின் சாரம் என்று ஆளுநர் மீண்டும் உளறி யுள்ளார். வள்ளலாரின் ஆன்ம நேய ஒருமைப்பாட்டு உள்ளத்தை குறுகிய புத்தியும், நரித்தனமும் கொண்ட ஆளுநர் தொடர்ந்து அவமதிப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இதனிடையே, நந்தனார் பிறந்த ம.ஆதனூர் கிராமத்தில் பட்டியலினத்தைச் சேர்ந்தவர்களுக்கு உபநயனம் எனும் சடங்கை செய்து பூணூல் அணிவிக்கும் நிகழ்ச்சியில் ஆளுநர் பங்கேற்றுள்ளார். பிறப்பினால் யாரும் உயர்வு தாழ்வு இல்லை; பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற குறள் நெறிக்கு மாறாக பூணூல் அணிவதன் மூலம் ஒருவரை மேல்நிலையாக்கம் செய்ய முடியும் என்பதுதான் இந்த நிகழ்வின் பொருள். இராமானுஜர், வள்ளலார், அய்யன் காளி, நாராயணகுரு, வைகுண்ட சாமிகள் போன்றவர்கள் சமய வரம்புக்குள் நின்று சாதியை ஒழிக்க போராடினர். ஆனால் பூணூல் அணிவிக்கும் நிகழ்ச்சி அத்தகையது அல்ல. இந்த காலத்திற்கு அது பொருந்தக்கூடியதும் அல்ல. எனவே ஆளுநர் இத்தகைய வேண்டாத வேலை களை விட்டு விட்டு உருப் படியாக எதையாவது யோசிப்பது நல்லது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



தாம்பரம் மாநகரம் 49 வது வார்டு மார்க்கெட் பகுதியில் அமைந்துள்ள எம்.ஆர். தியேட்டர் சர்வீஸ் சாலையில் கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்று வரும் சாலைப் பணியையும் அதைத் தொடர்ந்து மீன் மார்க்கெட்டில் மழைக் காலங்களில் தண்ணீர் இருப்பில் இருந்து கடைகளுக்கு உள்ளே வருவதாக மீன் கடை வியாபாரிகள் தெரிவித்த தகவலின்படி மண்டலத்தலைவர் டி.காமராஜ் மாநகராட்சி அதிகாரிகளுடன் மார்க்கெட் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று ஆய்வு மேற்கொண்டார். உடன் கழகத் தோழர்கள் உள்ளனர்.

### திராவிடர் கழகத்தின் சார்பில் தஞ்சையில் - முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

## ‘சமூகநீதிக்கான சரித்திர நாயகர்’ - முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பாராட்டு விழா!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையில்! முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏற்புரை!

சென்னை,அக்.7-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா, ‘சமூகநீதிக்கான சரித்திர நாயகர்’ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்குப் பாராட்டு விழா தாய்க்கழகமாம் திராவிடர் கழகத்தின் சார்பில் தஞ்சை மாநகரில் எழுச்சியுடன் நேற்று (6.10.2023) மாலை நடைபெற்றது.

தஞ்சை மாநகரமே விழாக்கோலம் பூண்டது. வரவேற்பு தோரணங்கள், கழகக்கொடிகள் அமைக்கப்பட்டு உற்சாக மிகுதியில் தஞ்சை மாநகரம் திகழ்ந்தது. திராவிடர் கழகம், தி.மு.க. உள்ளிட்ட சமூகநீதியில் அக்கறை கொண்டுள்ளவர்கள் தங்களின் குடும்ப விழாவாக கருதி விழாவுக்குத் திரண்டனர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா, ‘சமூகநீதிக்கான சரித்திர நாயகர்’ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்குப் பாராட்டு விழா திராவிடர் கழகத்தின் சார்பில் நேற்று (6.10.2023-வெள்ளிக்கிழமை) மாலை 5 முதல் 8:30 வரை தஞ்சாவூர் புதிய பேருந்து நிலையம் அருகில் மாநகராட்சி மாநாட்டு அரங்கத்தில் தஞ்சை எஸ்.என். எம். உபயதுல்லா நினைவரங்கம் இராஜகிரி கோ.தங்கராசு நினைவு மேடை யில் நடைபெற்றது.

கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலி.பூங்குன்றன் வரவேற்புரையாற்றினார்.

கழக செயலவைத் தலைவர் சு.அறிவுக்கரசு, பொதுச் செயலாளர்கள் முனைவர் துரை.சந்திரசேகரன், வீ. அன்புராஜ், பொருளாளர் வீ.குமரேசன், மாநில ஒருங்கிணைப்பாளர்கள் தஞ்சை இரா.ஜெயக்குமார், உரத்தநாடு இரா.குணசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

**‘தாய் வீட்டில் கலைஞர்’ நூல் வெளியீடு!**

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தொகுத்த ‘தாய் வீட்டில் கலைஞர்’ நூலை தமிழ்நாடு முதலமைச்சர் வெளியிட, முதல் படியை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பெற்றுக் கொண்டார். தஞ்சை மத்திய தி.மு.க. மாவட்டச் செயலாளர் - சட்டமன்ற உறுப்பினர் துரை.சந்திரசேகரன், தி.மு.க. உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் -நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் - சட்டமன்ற உறுப்பினர் டி.கே. ஜி.நீலமேகம், தஞ்சை மாநகர தி.மு.க.செயலாளர், - மேயர் சண்.இராமநாதன், தி.மு.க. மருத்துவரணி மாநில துணைச் செயலாளர் - துணை மேயர் டாக்டர் அஞ்சுகம்பூபதி ஆகியோர் நூலைப் பெற்றுக்கொண்டனர்.

**விழாவில் பாராட்டுரை!**

சென்னை உயர்நீதிமன்ற மேனாள் நீதிபதி ஜி.எம்.அக்பர் அலி, மேற்கு வங்க மாநில மேனாள் தலைமைச் செயலாளர் ஜி.பாலச்சந்திரன் அய்.ஏ.எஸ்., தவத்திரு பாலபிரஜாபதி அடிகளார் ஆகியோர் பாராட்டுரை ஆற்றினர்.

திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விழாத் தலைமையேற்று சிறப்புரை, பாராட்டுரை ஆற்றினார்.

‘சமூகநீதிக்கான சரித்திர நாயகர்’ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நிறைவுரை ஏற்புரை ஆற்றினார்.

தஞ்சாவூர் மாவட்ட கழகத் தலைவர் வழக்குரைஞர் சி. அமர்சிங் நன்றியுரை ஆற்றினார்.

கழகத் துணைப் பொதுச் செயலாளர் ச.பிரின்சு என்னாரெசு பெரியார் இணைப்புரை வழங்கினார்.

விழாவில், தி.மு.க. உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எல்.கணேசன், தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கல்யாணசுந்தரம், தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் கா. அண்ணா துரை, மயிலாடுதுறை தொகுதி நாடாளுமன்ற தி.மு.க. உறுப்பினர் செ.இராமலிங்கம், அரசு தலைமைக் கொறடா சட்டமன்ற உறுப்பினர் முனைவர் கோவி.செழியன், தி.மு.க.தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர் நா. அசோக்குமார், து.செல்வம், சட்டமன்ற மேனாள் உறுப்பினர் எம்.இராமச்சந்திரன், சட்டமன்ற உறுப்பினர் க.அன்பழகன், சட்டமன்ற மேனாள் உறுப்பினர் கே.டி.மகேஷ் கிருஷ்ண சாமி, தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. அவைத் தலைவர் ச.இறைவன், தஞ்சை மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர், தி.மு.க. உஷா புண்ணிய மூர்த்தி, தஞ்சை ஒன்றியக் குழுத் தலைவர், தி.மு.க. வைஜெயந்திமாலா கேசவன் உள்பட தி.மு.க. பொறுப்பாளர்கள் பங்கேற்றனர்.

விழாவில் திராவிடர் கழகப்பொறுப்பாளர்கள் பிரச்சாரச் செயலாளர் வழக்குரைஞர் அ.அருள்மொழி, வெளியுறவுச் செயலாளர் கோ.கருணாநிதி, துணைப் பொதுச் செயலாளர்கள் பொறியாளர் ச. இன்பக் கனி, வழக்குரைஞர் சே. மெ.மதிவதனி, வழக்குரைஞரணி தலைவர் வழக்குரைஞர் த.வீர சேகரன், தொழிலாளரணி மாநிலச் செயலாளர் மு.சேகர், மாநில கிராமப் பிரச்சாரக் குழு அமைப்பாளர் முனைவர் அதிரடி க.அன்பழகன், திராவிடர் விவசாயத் தொழிலாளர் அணி மாநிலச் செயலாளர் குடவாசல் க.வீரையன், மாநில இளைஞரணிச் செயலாளர் த.சீ.இளந்திரையன், திராவிட மாணவர் கழக மாநிலச் செயலாளர் இரா.செந்தூரபாண்டியன், மாநில மகளிரணிச் செயலாளர் தகடூர் தமிழ்ச்செல்வி, திராவிட மகளிர் பாசறை மாநிலச் செயலாளர் வழக்குரைஞர் பா.மணியம்மை, கழகக் காப்பாளர்கள் வெ.ஜெயராமன், மு.அய்யனார், தலைமைக் கழக அமைப்பாளர் குடந்தை க.குருசாமி, தஞ்சாவூர் மாவட்டச் செயலாளர் வழக்குரைஞர் அ.அருணகிரி, மன்னார்குடி மாவட்டத் தலைவர் ஆர்.பி. எஸ்.சித்தார்த்தன், பட்டுக்கோட்டை மாவட்டத் தலைவர் பெ.வீரையன், கும்பகோணம் மாவட்டத் தலைவர் வழக்குரைஞர் கு.நிம்மதி, பட்டுக்கோட்டை மாவட்டச் செயலாளர் வை. சிதம்பரம், கும்பகோணம் மாவட்டச் செயலாளர் சு.துரைராஜ், மன்னார்குடி மாவட்டச் செயலாளர் கோ.கணேசன், தஞ்சை மாநகரத் தலைவர் பா.நரேந்திரன், தஞ்சை மாநகரச் செயலாளர் அ.டேவிட் வரவேற்பாளர்களாக களப் பணி ஆற்றினர்.

**‘திராவிடமே வெல்லும்’ கலை நிகழ்ச்சிகள்!**

மாலை 5 மணிக்கு தெற்குநத்தம் சித்தார்த்தன், உறந்தை கருங்குயில் கணேசன், திருத்தணி பன்னீர்செல்வம் இணைந்து வழங்கும் ‘திராவிடமே வெல்லும்!’ பெரியார் கல்வி நிறுவனங்கள் வழங்கும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

திராவிடர் கழக தலைமை நிலையம் விழாவை ஒருங்கிணைத்து நடத்தியது.



காஞ்சிபுரம் மாநகரம் 3ஆம் பகுதி கழக வாக்குச்சாவடி நிலை முகவர், பாக முகவர் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட கழகச் செயலாளர் சுந்தர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி. எம்.பி. எழிலரசன், மாநகர செயலாளர் பி.கே.வி. தமிழ்ச்செல்வன், மேயர் திருமதி மகாலட்சுமி, சன் பிராண்ட் ஆறுமுகம், எஸ்.கே.பி. சீனிவாசன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அ.யுவராஜ், வ.மலர்மன்னன், நாத்திகம் நாகராஜன், டி.வெங்கட்ராமன், பகுதிச் செயலாளர் அ.தசரதன் உள்ளிட்ட வட்டச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு175க்குட்பட்ட அம்பேத்கர் நகர், 2வது தெருவில் வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியின்கீழ் ரூ.1.32 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட கலைஞர் நூற்றாண்டு சமுதாய நலக்கூடத்தினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் நேற்று (06.10.2023) பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், அடையாறு மண்டலக் குழுத் தலைவர் இரா. துரைராஜ், 175ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி மகேஸ்வரி முருகவேல் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



செங்கல்பட்டு மாவட்டம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முட்டுக்காடு படகு இல்லத்தில் பொது மற்றும் தனியார் பங்களிப்பு திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் மிதக்கும் உணவகம் அமைக்கும் பணியினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று (6.10.2023) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

### கர்நாடகாவில் பா.ஜ.க.வுடன் ம.ஜ.த.கட்சி இணைந்ததால் - சிறுபான்மையினர் அதிருப்தி!

# நாடாளுமன்றத் தேர்தலில் 'இந்தியா' கூட்டணிக்கு பிரகாசமான வெற்றி வாய்ப்பு!

## 'தினகரன்' நாளேட்டில் தலையங்கம்!

சென்னை, அக். 7 -

கர்நாடக மாநிலத்தில் மதச் சார்பற்ற ஜனதாதளக் கட்சி பா.ஜ.க. கூட்டணியில் இணைந்ததால் சிறுபான்மை யினர் வாக்கு வங்கி பாதிக்கப்பட்டு நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது என 'தினகரன்' நாளேடு 6.10.2023 அன்று தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.



தினகரன்

அக்டோபர் 6, 2023 வெள்ளிக்கிழமை

கூட்டணி அதிருப்தி

நாடாளுமன்ற தேர்தலில் ஒன்றிய பாஜவுடன் கூட்டணி என்று மதசார்பற்ற ஜனதா தள கட்சியின் தேசிய தலைவரும் முன்னாள் பிரதமருமான தேவகவுடா முடிவு செய்து அறிவித்தார். இதை கர்நாடக முன்னாள் முதல்வர் குமாரசாமியும் வழிமொழிந்தார். இதை விமர்சித்த காங்கிரஸ் கட்சி 'தேவகவுடா அவரது கட்சியில் இருந்து மதசார்பற்ற என்ற வார்த்தையை எடுத்துவிடலாம்' என்று கூறியது. காங்கிரஸ் கட்சி விமர்சிப்பது அரசியல் ரீதியானது என்று எடுத்து கொண்டாலும் மதசார்பற்ற ஜனதா தள நிர்வாகிகளே இக்கூட்டணியை விரும்பாமல் அதிருப்தியும், எதிர்ப்பும் தெரிவித்து வருகின்றனர்.

கர்நாடகாவில் மண்டியா, ராம்நகரம், சென்னபட்டணா, கோலார், ஹாசன் உள்ளிட்ட சில பகுதிகளில் மதசார்பற்ற ஜனதா தள கட்சிக்கு கணிசமான

அத் தலையங்க விவரம் வருமாறு:

நாடாளுமன்றத் தேர்தலில் ஒன்றிய பா.ஜ.க.வுடன் கூட்டணி என்று மதசார்பற்ற ஜனதா தள கட்சியின் தேசிய தலைவரும் முன்னாள் பிரதமருமான தேவகவுடா முடிவு செய்து அறிவித்தார். இதை கர்நாடக முன்னாள் முதல்வர் குமாரசாமியும் வழிமொழிந்தார். இதை விமர்சித்த காங்கிரஸ் கட்சி 'தேவகவுடா அவரது கட்சியில் இருந்து மதசார்பற்ற என்ற வார்த்தையை எடுத்துவிடலாம்' என்று கூறியது. காங்கிரஸ் கட்சி விமர்சிப்பது அரசியல்ரீதியானது என்று எடுத்துக் கொண்டாலும் மதசார்பற்ற ஜனதா தள நிர்வாகிகளே இக்கூட்டணியை விரும்பாமல் அதிருப்தியும், எதிர்ப்பும் தெரிவித்து வருகின்றனர்.

கர்நாடகாவில் மண்டியா, ராம்நகரம், சென்னபட்டணா, கோலார், ஹாசன் உள்ளிட்ட சில பகுதிகளில் மதசார்பற்ற ஜனதா தள கட்சிக்கு கணிசமான வாக்கு வங்கி இருக்கிறது. அதிலும் குறிப்பாக இஸ்லாமியர்களின் வாக்குகள் அதிகம் இருக்கிறது. இந்நிலையில் நாடாளுமன்ற தேர்தலில் ம.ஜ.த. பா.ஜ.வு.டன் கூட்டணி அமைத்ததால் ம.ஜ.த.வில் இருக்கும் சிறுபான்மையின பிரிவு தலைவர்கள் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர். இதில் பல மாவட்ட இஸ்லாமிய தலைவர்கள், நிர்வாகிகள் பதவியை ராஜினாமாவே செய்துவிட்டனர்.

கடந்த சட்டமன்றத் தேர்தலின் போது இஸ்லாமியர்களின் வாக்கு ம.ஜ.த.வுக்கு கிடைக்கவேயில்லை என்றும் அதனால் அவர்கள் கட்சியை விட்டு வெளியேறுவதால் எந்த நஷ்டமும் இல்லை என்றும் குமாரசாமி கருத்து தெரிவித்தார். குமாரசாமியின் இந்தக் குற்றச்சாட்டுக்கு அக்கட்சியின் மாநில தலைவரும் முன்னாள் ஒன்றிய அமைச்சருமான சி.எம்.இப்ராஹிம் பதிலடி கொடுத்துள்ளார். கடந்த சட்டமன்ற தேர்தலில் முஸ்லிம் வாக்குகள் ம.ஜ.த.வுக்கு கிடைக்க வில்லை என்று சொல்வது உண்மையில்லை. 20 சதவீத வாக்குகள் ம.ஜ.த.வுக்கு கிடைத்துள்ளது.

ம.ஜ.த.- பா.ஜ.க. கூட்டணியில் எங்களுக்கு விருப்ப மில்லை. அதிருப்தியில் தான் இருக்கிறோம். வரும் 16ஆம் தேதி கட்சியில் உள்ள அனைத்து தரப்பினருடனும் ஆலோசித்து அதன் பிறகு எடுக்கப்படும் முடிவு குறித்து தேவகவுடாவிடம் தெரிவிப்பேன் என்று கூறியுள்ளார். ம.ஜ.த.வில் உள்ள சிறு பான்மையினர் கூண்டோடு வெளியேறினால் அவர்கள் அனைவரும் நிச்சயம் காங்கிரஸ் கட்சியில் தான் இணைவார்கள். இதனால் கர்நாடகாவில் காங்கிரஸ் கட்சிக்கு நாடாளுமன்ற தேர்தலில் பிரகாசமான வெற்றி வாய்ப்பு ஏற்படும் என்பது அரசியல் விமர்சகர்களின் கருத்தாக இருக்கிறது.

பா.ஜ.வுடன் கூட்டணி அறிவித்த நாள் முதல் மதசார்பற்ற ஜனதா தள கட்சியில் அதிருப்தி ஏற்பட்டு நிர்வாகிகளின் ராஜினாமா தொடர்ந்த வண்ணம் இருக்கிறது. கூட்டணி அறிவித்த கையோடு தொகுதி உடன்பாடு செய்து கொண்டு பிரசாரத்தில் டிசம்பர் மாதம் முதல் களம் இறங்க திட்ட மிட்டிருந்த கர்நாடக பா.ஜ. தலைவர்கள் இதனால் குழப்பத்தில் உள்ளனர். இதே போன்று தமிழகத்தில் பா.ஜ.க. கூட்டணியில் இருந்து அதிமுக விலகிவிட்டது. ஆந்திராவில் தேசிய ஜனநாயக கூட்டணி யில் இருந்து நடிகர் பவன் கல்யாண் கட்சி வெளியேறிவிட்டது. இப்படி அனைத்து மாநிலங்களிலும் பா.ஜ.க.வுடன் கூட்டணிக்கு எதிர்ப்பு வலுத்து வருவதால் பா.ஜ.க. தேசிய தலைமையும், மாநில தலைமையும் விழிபிதுங்கி நிற்கி ன்றனர். இந்த பிரச் சினையை எப்படி கையாள்வது என்று பா.ஜ.க மூத்த தலைவர்கள் தீவிரமாக ஆலோசனை நடத்தி வருகிறார்களாம்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

### திருவேற்காட்டில் ரூ.1கோடி மதிப்பில்

# சாலையோர வியாபாரிகளுக்கு 50 கடைகள்!

## ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. வழங்கினார்!

திருவள்ளூர், செப்.7

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவேற்காடு நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சிறு வியாபாரிகள், சாலையோர வியாபாரிகளுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் நடமாடும் சிறு கடைகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் நகர் மன்ற தலைவர் என்.இ.கே. மூர்த்தி தலைமை தாங்கினார். ஆணையர் ஜஹாங்கீர் பாஷா, நகர அமைப்பு ஆய்வாளர் விக்னேஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் / திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ. 50 பயனாளிகளுக்கு நடமாடும் சிறு கடைகளை வழங்கினார்.

ஒரு கடையின் மதிப்பு ரூ.2 லட்சம் என ரூ.1 கோடி மதிப்பீட்டில் 50 கடைகளை பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

சிற்றுண்டி, டீக்கடை, நொறுக்கு தீனி கடை, பூக்கடை, என பல்வேறு வித மான வியாபாரம் செய்ய உள்ளதாக பயனாளிகள் தெரிவித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் நகராட்சி சுகாதார அலுவலர் ஆல்பர்ட் அருள்ராஜ், மாவட்ட கழக நிர்வாகிகள் கவுன்சிலர்கள் வட்டக் கழக செயலாளர்கள் ஏ.ஜெ. பவுல், ஆர்.காந்தி, எஸ்.சங்கர், பெண்ணியமின், குமாரசாமி, கோலடி ஜெ.சரவணன், பானு அரசு, நடுகுத்தகை கே.சுரேஷ்குமார், மாசெ.அக்னி ராஜேஷ், பி.உமாபதி, பரிசமுத்து, துரைகோபல், இளகோவன், பிரதானம், பி.சாந்தகுமார், விநாயகம், சாது, பேபிஸ்ரீ, அமலேஷ்வரி, ராஜா, சுடலைமணி, இளையராஜா, என்.ராஜி, நரேஷ், நகராட்சி ஊழியர்கள், அதிகாரிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள், வியாபாரிகள் கலந்து கொண்டனர்.

---

### டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. தலைமை! திருவள்ளூர் கிழக்கு

# மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில் மரக்கன்றுகள் நடும் விழா!

## அமைச்சர் ஆர்.காந்தி - பழ.செல்வகுமார் பங்கேற்பு!

திருவள்ளூர், செப்.7-

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.கழக சுற்றுசூழல் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு 1000 மரக்கன்றுகள் நடும் விழா இன்று (07.10.23 - சனிக்கிழமை) காலை 10 மணியளவில் மீஞ்சூர் பேரூர் கழகம் 8 - வது வார்டு சூர்ய நகர் பூங்காவில் மாவட்ட கழக செயலாளர் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ. கோவிந்தராஜன் தலைமையில் நடைபெறுகிறது. மாவட்ட சுற்றுசூழல் அணி அமைப்பாளர் மு.பாஸ்கரன் வரவேற்புரை யாற்றுகிறார்.

நிகழ்ச்சியில் மாவட்ட பொறுப்பு அமைச்சர் ஆர். காந்தி, சுற்றுச்சூழல் அணி மாநில துணைச் செயலாளர் திருவள்ளூர் மண்டல பொறுப்பாளர் பழ.செல்வகுமார் பங்கேற்று மரக் கன்றுகள் நட்டு வாழ்த்துரை வழங்குகிறார்.

எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ், பா.சுகுமாறன், கா.சு.ஜெகதீசன், கே.ஆறுமுகம், க.சு. தமிழ் உதயன், ருக்மணி மோகன் ராஜ், ப.அலெக்ஸ்சாண்டர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இ.ஏ.பி.சிவாஜி, சி.எச். சேகர், மு.பகலவன், ஜெ. மூர்த்தி, கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, எம்.எல்.ரவி, மு.கதிரவன், எஸ்.ரமேஷ், பா.செ.குணசேகரன், பி.வெங்கடாசலபதி, டாக்டர் பரிமளம் விஸ்வநாதன், ஜி.ரவி, தமிழ் செல்வி பூமிநாதன், வெ.அன்புவாணன், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், ஜி.ஸ்டாலின், எ.ஆர்.டி.உதயசூரியன், நா.செல்வ சேகரன், மு. மணிபாலன், ஆ.சத்தியவேல், டி.கே.சந்திர சேகர், கி.வே.ஆனந்தகுமார், பொன்னுசாமி (எ) ஜான், நா.பரிமளம், ஜி.இரவிக்குமார், இரா.அறிவழகன், அபிராமி குமரவேல், பி.முத்து, மீஞ்சூர் பேரூர் நிர்வாகிகள் அனைத்து அணிகளின் நிர்வாகிகள், அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் பங்கேற்கின்றனர். முடிவில் சுற்றுசூழல் அணி நிர்வாகிகள் எ.ரஜினி, ச.யோகி, எஸ்.ராஜாராம், ஆர்.விஜய பிரசாத், சி.விக்ரமன் நன்றியுரை யாற்றுகிறார்கள்.

---

### 5 மாநில சட்டமன்ற தேர்தல்

# தேர்தல் பார்வையாளர்கள் கூட்டத்தில் விவாதம்

புதுடெல்லி, அக்.7-

சட்டீஸ்கர், மத்தியப்பிரதேசம், தெலங்கானா, மிசோரம் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களில் வருகிற நவம்பர் மற்றும் டிசம்பர் மாதத்தில் சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ளது. இதற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகின்றது.

ராஜஸ்தான், மிசோரம், மத்தியப்பிரதேசம் மற்றும் சட்டீஸ்கரில் தேர்தல் ஆணைய குழு ஏற்கனவே நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தது. இதனை தொடர்ந்து 5 மாநில தேர்தல் குறித்த அட்டவணையை தேர்தல் ஆணையம் வெளியிட உள்ளது. இதனையொட்டி தேர்தல் பார்வையாளர்களுக்கான கூட்டம் நேற்று டெல்லியில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் காவல் துறை, பொது மற்றும் செலவின கண்காணிப்பாளர்கள் பங்கேற்கின்றனர்.

தேர்தலில், தேர்தல் நடத்தை விதிகளை சிறப்பாக செயல்படுத்தவும், பண பலமும், ஆள் பலமும் இடையூறு செய்யாமல் இருப்பதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து அடுத்த சில நாட்களில் 5 மாநில சட்டமன்ற தேர்தல் தேதிகளை ஆணையம் அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

---

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு- தயாநிதி மாறன் - அ.வெற்றிஅழகன் முன்னிலை! கூ.பீ.ஜெயின் தலைமை!

# வில்லிவாக்கம் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா புகழரங்கம்!

## ஆ.இராசா எம்.பி - விடுதலை இராஜேந்திரன் க.கனகராஜ் சிறப்புரை!

சென்னை, அக். 7

சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நுற்றாண்டு விழாவை முன்னிட்டு "திருவாரூரின் அறிவுத்தேர் ! திசைகளெங்கும் அவரின் பேர்!" எனும் தலைப்பில் மாபெரும் வாழ்த்தரங்கம் இன்று (7.10.2023 சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு, வில்லிவாக்கம் பேருந்து நிலையம் அருகில் நடைபெறுகிறது.

வில்லிவாக்கம் மேற்கு பகுதி செயலாளரும், 8 வது மண்டலக் குழு தலைவருமான கூ.பீ.ஜெயின் தலைமை வகிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன், வில்லிவாக்கம் கிழக்கு பகுதிச் செயலாளர் வே.வாசு, சாவித்திரி ஸ்ரீ வீரராகவன், டி.வி.செம்மொழி எம்.சி, சுதா தீனதயாளன் எம்.சி, வானவில் விஜய், லதா வாசு எம்.சி, ஆர்.வரதன் , ஜி.ஜெ.பிரபு, எம்.சுரேஷ், ஜெ.எஸ்.பிரபு, வி.து.ராமமூர்த்தி, பா.இளையா, மு.கலைச்செல்வி, ஐ.சி.எப். சுரேஷ்பாபு, சிட்கோ சேகர், க.சுகுமாரன், பா.ஜானி, சொ.முருகேசன், ப.லோகு பாபு, ஜெ.தங்கராஜ், ஆர். கோபாலகிருஷ்ணன், மா.கபிலன் கோ.மணிவேந்தன், பா.தே.தீனதயாளன், கே.எஸ். பாபு, க.மணிமாறன், எஸ். கே.பி.தீபக்குமார், ம.சுந்தர் எபி, ஆ.சக்திவேல், சிட்கோ பி.சுரேஷ்பாபு, பூ.சத்தியேந்திரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி, திராவிடர் விடுதலை கழக பொதுச் செயலாளர் விடுதலை இராஜேந்திரன், சி.பி.எம்.மாநில செயற்குழு உறுப்பினர் கே. கனகராஜ், மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு தலைவர் ப.ரங்கநாதன், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளரும், வில்லிவாக்கம் தொகுதித் தேர்தல் பார்வையாளர் வி. கௌதம் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கே.எஸ். ரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, சங்கரி நாராயணன், எஸ்.மணிமூடி, கே.எஸ். எம்.நாதன், எம்.விஜயகுமார், என்.வி.எம்.ஷேக்அப்துல்லா, வே.உமாகாந்த, சி.மகேஷ்குமார், பரிதி இளம் சுருதி, வழக்கறிஞர் இந்திரஜித், கோ.ஏகப்பன், தேவஜவஹர், ஜி.மகாதேவன், புனிதவதி எத்திராசன், இசட். ஆசாத், சொ.வேலு, சரிதா மகேஷ்குமார், பா.ஸ்ரீராமுலு, டாக்டர்.ஜி.சாந்தகுமாரி, ஐ.சி.எப்.வா.முரளிதரன், எ.நாகராசன், டி.எஸ்.பி. ராஜாகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, ப.சுதாகர், எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், எஸ்.பன்னீர்செல்வம், கோ.மணி, பி.ஜெ.துளசிங்கம், லயன் பி. உதயசங்கர், ரமேஷ் (எ) நீலகண்டன், எம்.இப்ராஹிம் கனி, அ.நிர்மலாதேவி, டாக்டர். ஏ.பி.பூர்ணிமா, இரா. கலைச்செல்வி, டி.லோகேஷ், ஜெ.பாலமுருகன், பா.ஜெகதீஷ், க.வினோத், எஸ்.தனசேகர், அற.டி.சங்கர் நானா, நா.துலுக்காணம், எல். பி.எப்.மோகன், துரைகண்ணன், ஜி.தாமோதரன், ராஜேஸ்வரிஸ்ரீதர், ஜி.வி.நாகவள்ளி, எம்.பெரோஸ்கான், பி.விஜயகுமார், எம்.விநாயகம், அற.எஸ்.சித்திக், ம. அசோக்குமார், க.பா. பிரதீப்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, எல்.சம்பத்குமார், கா.ராஜ்முகமது, து.ஆயிரம் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சிக்கு வட்டச் செயலாளர்கள் ஆர்.தீனதயாளன், மா.அகிலன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

---

### பொன்.ரமேஷ் - ஜி.ஏ.ராயப்பன் தலைமையில்

# திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியத்தில் பூத் வாரியாக செயல்வீரர்கள் கூட்டம்!

## ஒன்றியச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி அறிக்கை!

காஞ்சிபுரம், அக். 7

திருபெரும்புதூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி எடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியத்தில் பூத் வாரியாக செயல்வீரர்கள் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆணைக்கிணங்க, மாவட்ட கழகத்தால் அனுப்பி வைக்கப்பட்ட மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் பொன்.ரமேஷ்கனி, மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை அமைப்பாளர் ஜி.ஏ.ராயப்பன் ஆகியோர் தலைமையில் நாளை (8.10.2023 ஞாயிற்றுக்கிழமை) காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை செயல்வீரர்கள் கூட்டம் நடைபெறுகிறது.

ஒன்றியத்தின் பூத் பொறுப்பாளர்களாக, காந்தூர் 21, 22 ஆகிய பூத்துகளுக்கு ஜெ.சிவபாதம், ஜி.செல்வகுமார், எஸ். பிச்சிமணி, பி.புஷ்பராஜ், என். சிகாமணி, மதுரமங்கலம் 19, 29 வது பூத்துகளுக்கு ஜெ.சிவபாதம், ஜி.செல்வகுமார் ஏ.ஜெகதீசன், சி.சுருளி, எம். ஜவகர், கண்ணந்தாங்கல் 18 வது பூத்துக்கு ஜெ.சிவபாதம், ஜி.செல்வகுமார், ஜி.விஸ்வநாதன், ஆர்.குமார், ஏகனாபுரம் 14, 15 வது பூத்துகளுக்கு ஆர்.பிரகாசம், ஆர். வெங்கடேசன், ஜி.சரவணன், பி.ரவிச்சந்திரன், கருணாகரன், சிங்கிலிபாடி 17 வது பூத்துக்கு ஆர்.பிரகாசம், ஆர். வெங்கடேசன், எம்.சின்ன கண்ணு, என்.வெங்கடேசன், பி.கெங்காதரன், வி.சேகர், டி.மணிகண்டன், பொடவூர் 29 வது பூத்துக்கு பி.ரவி, பாப்பாங்குழி 28 வது பூத்துக்கு இ.கோதண்டன், என .சத்யா, ஆர்.கணேசன், ஆர்.நடராஜ், சேந்தமங்கலம் 27 வது பூத்துக்கு பி.ரவி, இ. முனிகிருஷ்ணன், ஆர்.வேலு, எஸ்.வெங்கடேசன், பி.துரை, ஜெ.மணிகண்டன், முருகானந்தம், கீரநல்லூர் 25 வது பூத்துக்கு எம்.ஆறுமுகம், பி. மீனாட்சி சுந்தரம், பி.சுரேஷ், செல்வழிமங்கலம் 26 வது பூத்துக்கு பி.வி.கே.செல்வம், எம். வெங்கடேசன், ஆர்.ஆதிமூலம், சந்திரசேகர், எம்.தேவதாஸ், பி.நாராயணன், கே. மேகலா, ஆர்.காமாட்சி ஆகியோர் ஒன்றிய பூத் பொறுப்பாளராக செயல்படுவர்.

இக்கூட்டத்திற்கு மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், பி.எல்.ஏ 2 முகவர்கள், வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், இளைஞர், மாணவர், மகளிர் அணியின் தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழகத்தின் முன்னாள் இந்நாள் நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் எஸ். டி.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

---

### தா.இளைய அருணா எம்.சி. முன்னிலை! கவிஞர் நன்மாறன் ஆலோசனை வழங்குகிறார்!

# சென்னை வடக்கு மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் கோ.சதீஷ் வேண்டுகோள்!

சென்னை, அக். 7

சென்னை வடக்கு மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை ஆலோசனைக் கூட்டம் ராயபுரத்தில் உள்ள மாவட்டக் கழகச் செயலாளர் அலுவலகத்தில் இன்று (7.10.2023 சனிக்கிழமை) மாலை 5.30 மணி அளவில், சென்னை வடக்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவைத் தலைவர் எம்.எம். டி.சலாவுதீன் தலைமையில் சென்னை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.இளையஅருணா எம்.சி. முன்னிலையில் கழக கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணைச் செயலாளர் கவிஞர் நன்மாறன் ஆலோசனை வழங்குகிறார்.

இந்நிகழ்வில் சென்னை வடக்கு மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைத் தலைவர் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் :

கலைஞர் நூற்றாண்டு பேச்சுப்போட்டி கவிதை போட்டி நடத்துதல் குறித்து மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு சென்னை வடக்கு மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் கோ.சதீஷ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## இரா. துரைராஜன்

**அக்டோபர் 7 (2017)**



**நாகப்பட்டினம் மாவட்டத்தில் கழகம் வளர்த்தவர்களில் இவரும் ஒருவர்.**

**1966ல் வட்டத் தலைவராகவும் – 1972 முதல் 1995 ஆம் ஆண்டு வரையிலான 23 ஆண்டுகள் தலைஞாயிறு ஒன்றியக் கழகச் செயலாளராகவும் கழகப் பணியாற்றியவர்.**

**கூட்டுறவு சங்கத் தலைவராகவும், வீடுகட்டும் கூட்டுறவு சங்கத் தலைவராகவும், வார்டு கவுன்சிலராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் நடத்திய அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.10.2023) தஞ்சாவூர், முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி அரங்கில், திராவிடர் கழகத்தின் சார்பில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு விழாப் பேருரையாற்றினார். இவ்விழாவில், திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். பாலு, ஆ. ராசா, எஸ்.எஸ். பழனிமாணிக்கம், எஸ். கல்யாணசுந்தரம், செ. இராமலிங்கம், தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், அரசு தலைமைக் கொறடா கோவி. செழியன், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை. சந்திரசேகரன், டி.கே. ஜி. நீலமேகம், நா. அசோக்குமார், பூண்டி கலைவாணன், கா. அண்ணாதுரை, நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ. மதிவாணன், சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஜி.எம். அக்பர் அலி, மேற்கு வங்க மாநில முன்னாள் தலைமைச் செயலாளர் ஜி. பாலச்சந்திரன், , தஞ்சை மாநகராட்சி மேயர் சண். இராமநாதன், துணை மேயர் டாக்டர் அஞ்சுகம்பூபதி, திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், சமூகநீதிக் கண்காணிப்புக் குழு தலைவர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன், தவத்திரு பாலபிரஜாபதி அடிகளார், திராவிடர் கழக செயலவைத் தலைவர் அறிவுக்கரசு, பொதுச் செயலாளர் வீ. அன்புராஜ் மற்றும் திராவிடர் கழகத்தின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.10.2023) தஞ்சாவூர், முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி அரங்கில் திராவிடர் கழகத்தின் சார்பில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் தொகுத்த ”தாய் வீட்டில் கலைஞர் நூலினை வெளியிட்டார். இவ்விழாவில், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். பாலு, ஆ.ராசா, எஸ்.எஸ். பழனிமாணிக்கம், எஸ். கல்யாண சுந்தரம், செ.இராமலிங்கம். தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், அரசு தலைமைக் கொறடா கோவி. செழியன், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை. சந்திரசேகரன், டி.கே.ஜி. நீலமேகம், நா. அசோக்குமார். பூண்டி கலைவாணன், கா. அண்ணாதுரை, நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள். முன்னாள் உறுப்பினர்கள், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ,மதிவாணன், சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஜி.எம். அக்பர் அலி. மேற்கு வங்க மாநில முன்னாள் தலைமைச் செயலாளர் ஜி. பாலச்சந்திரன், தஞ்சை மாநகராட்சி மேயர் சண். இராமநாதன். துணை மேயர் டாக்டர் அஞ்சுகம்பூபதி, திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், சமூகநீதிக் கண்காணிப்புக் குழு தலைவர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன், தவத்திரு பாலபிரஜாபதி அடிகளார், திராவிடர் கழக செயலவைத் தலைவர் அறிவுக்கரசு, பொதுச் செயலாளர் வீ. அன்புராஜ் மற்றும் திராவிடர் கழகத்தின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் நேற்று (06.10.2023) கோட்டூர்புரத்திலுள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற விழாவில் TCS Ion, IIT Pravartak Technologies Foundation, Coca Cola போன்ற முன்னணி நிறுவனங்களுக்கும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் , சிறப்புத் திட்ட செயலாக்கத்துறைச் செயலாளர் தாரேஷ் அகமது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெ.இன்னசென்ட் திவ்யா, மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டில் சாதிய வன்கொடுமைகள் அதிகரித்துள்ளது என்ற

# ஆளுநரின் கூற்று வன்மையானக் கண்டனத்திற்குரியதாகும்!

## விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் கண்டனம்!

சென்னை, அக். 7-

தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் ஆளுநரைக் கண்டித்து விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



நீண்ட நெடும் காலமாக சமூக நல்லிணக்கம் நீடித்து வரும் தமிழ்நாட்டில் சாதிய வன்கொடுகைள் அதிகரித்திருப்பதாக சனாதான ஆளுநர் ரவி கூறியிருப்பது வன்மையாகக் கண்டத்திற்குரியதாகும். இது உள்நோக்கம் கொண்டதாகும். சாதி பாகுபாடுகளை உருவாக்கி மனிதர்களைப் பிரித்து, அடிமைப்படுத்தியது ஆளுநர் ரவி அவர்களைதலை மேல் தூக்கி வைத்து கொண்டாடும் சனாதனமாகும். அந்த சனாதானத்தை இந்த மண்ணில் இருந்து வேரோடு அகற்றிட தந்தை பெரியார் தொடங்கி தொடர்ந்து தமிழ்நாட்டில் பல்வேறு தலைவர்கள் களம் கண்டதினுடைய விளைவு தான் இன்றைக்கு தமிழ்நாட்டில் சமூக நல்லிணக்கம் மேலோங்கி நிற்கிறது.

சனாதனமும், வருணாசிரம தர்மமும் ஏற்படுத்திய அந்த சாதி பாகுபாட்டை அடித்து நொறுகிட வேண்டுமேயானால் அடித்தட்டு மக்களுக்கு கல்வியும் அதன் மூலம் பொருளாதார மேம்பாட்டையும் தந்தாக வேண்டும். அதற்கான ஒரு கருவி தான் இட ஒதுக்கீடு. சமூக நீதியை நிலைநாட்டிய இந்த இட ஒதுக்கீட்டை முதன்முதலில் நடைமுறைபடுத்தியது தமிழ் மண். இந்திய அரசியல் சட்டம் முதன் முதலில் திருத்தப்பட்டதே இந்த இடஒதுக்கீடு கொள்கைக்காக தான். அதனை செய்து முடித்தது தமிழ் மண் என்பதை சனாதன ரவி உணர வேண்டும்.

இப்படிப்பட்ட தொடர் நடவடிக்கை காரணமாக தான் இன்றைக்கு தமிழ்நாட்டில் சமூக நீதி ஓங்கி நிற்கிறது. அதன் விளைவாக இந்தியாவின் உயர்கல்வி பெற்றோர்களின் சராசரி 26.1 விழுக்காடு என்றால் தமிழ்நாட்டில் உயர் கல்வி பெற்றவர்களின் விழுக்காடு 51.7 ஆக உள்ளது. இந்தியாவிலேயே கல்வி, சுகாதாரத்தில் முதன்மை இடத்தை பெறக்கூடிய நிலையை தமிழ்நாடு அடைந்திருப்பதற்கு காரணம் தமிழ்நாட்டு அரசின் கொள்கையாகும். இன்றைக்கு வடநாட்டில் உள்ள பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வாழ்வாதாரத்திற்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய மண்ணாக தமிழ் மண் விளங்கிக் கொண்டிருக்கிறது. இவையெல்லாம் சாதி, மத பேதங்களைக் கடந்து, சமூக நல்லிணக்கத்தை பேணிக்காத்து, சமூக நீதியை நிலைநாட்டுவதற்கான கொள்கைகளை தமிழ்நாடு அரசு நடைமுறைப்படுத்தியதின் விளைவேயாகும். இவற்றையெல்லாம் புறந்தள்ளிவிட்டு ஆளுநர் தமிழ்நாட்டில் சாதிய வன்கொடுமைகள் நிலைத்திருப்பதாக கூறுவது அப்பட்டமான பொய்யாகும்.

ஆளுநர், பாரதிய ஜனதா கட்சிக்கு வாக்கு சேகரிக்கும் வேலையை தொடர்ந்து செய்து கொண்டு இருக்கிறார். தற்போது நந்தனார் பிறந்த மண்ணான கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயில் அருகில் உள்ள மா.ஆதனூரில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு பூணூல் அணிவித்திருக்கிறார். இதன் மூலம் அந்த மக்கள் மேன்மை பெறுவர் என்பது எந்த பொருளாதார கொள்கை என்பதை இந்த பொருளாதார மேதை ஆளுநர் ரவி விளக்கிட வேண்டும். பூணூல் அணிவது என்பது வருணாசிர தர்மத்தின் ஒரு அங்கமாகும். பிராமணியம் தான் பூணூல் அணிவதை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்தி வருகிறது. பூணூல் அணிந்து இருந்தால் அவர் பிராமணன், மேட்டுக்குடியினர், போற்றப்பட வேண்டியவர் என்பது அவர்களுடைய மனுதர்ம சித்தாந்தமாகும். எனவே தலித் மக்களுக்கு பூணூல் அணிவதன் மூலம் அவர்களையும் மேட்டுக் குடி மக்களாக மாற்றிவிட்டதாக எண்ணுகிறாரா ஆளுநர்? பூணூல் அணிந்தால் மேட்டுக்குடியாகி விடுவார்கள் என்பது மக்களை ஏமாற்றும் முயற்சி மட்டுமல்ல மீண்டும் சனாதனத்தை மறைமுகமாக இந்த மண்ணில் ஊன்றும் முயற்சியாகும். சிதம்பரம் நடராஜரை தரிசிக்க சென்ற நந்தனாரை தடுத்து நிறுத்தி கொளுத்தி சாம்பலாக்கி, அவர் சென்ற பாதையை இன்று வரை அடைத்திருப்பது சனாதானத்தின் உச்சமாகும். ஆளுநருக்கு உண்மையிலேயே நந்தனார் மீது அக்கறை இருக்குமேயானால் சிதம்பரம் கோவிலில் அடைக்கப்பட்ட அந்த பாதையை திறந்து, நந்தனார் சென்ற பாதையில் அனைவரும் சென்று நடராசரை தரிசிக்கலாம் என்று அறிவித்திருந்தால் கூட அவருடைய செயலை நாம் புரிந்து கொள்ள முடியும். அதை விடுத்து ஆதிதிராவிட சமூகத்தை சேர்ந்தவர்களுக்கு பூணூல் அணிவிப்பது மக்களை ஏமாற்றும் முயற்சியாகும். திசை திருப்பும் ஏமாற்று வேலையாகும். ஆளுநரின் இந்த தகிடுதித்த வேலைகள் எல்லாம்தமிழ் மண்ணில் ஒருபோதும் எடுபடாது.

ஆளுநர் செய்ய வேண்டிய ஆயிரம் வேலைகள் காத்திருக்கிறது. அடித்தட்டு மக்களுக்கானத் திட்டங்கள் குறிப்பாக, மாணவர்களின் எதிர்காலத் திட்டங்களுக்கான மசோதாக்கள் ஆண்டு கணக்கில் ஆளுநர் மாளிகையில் தூங்கிக் கிடக்கிறது. அவற்றை தூசி தட்டி எடுத்து பார்க்க ஆளுநருக்கு நேரமில்லை. அதைவிடுத்து சனாதனத்தை பரப்புவதிலும் பாரதிய ஜனதா கட்சிக்கு வாக்கு சேகரிப்பிலும் கவனம் செலுத்தி செயல்பட்டு வருகிறார். அவருக்கு அதில் ஆர்வம் இருந்தால் ஆளுநர் பதவியை ராஜினாமா செய்து விட்டு சனாதனத்தை கையில் எடுத்து, பாரதிய ஜனதாவுக்கு வேலை செய்யட்டும்.

இவ்வாறு பொன்குமார் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.




# உடன்பிறப்பே... 26

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையைக் கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில் இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த இளம்பரிதி அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

# இளம்பரிதி : சென்னைத் தமிழில் ஒரு கொள்கை முழக்கம்!



ஓவியம் : ரவி பேலட்

கழக மேடைகளில் திராவிடக் கொள்கை முழக்கத்தினைப் பேரறிஞர், கலைஞர் குரல்வழி அறிந்தவர்களுக்கு, சென்னைத் தமிழில் கழக மேடைகளைக் கட்டிப் போட்ட இளம்பரிதியை அறியத் தருகிறது இந்த உடன்பிறப்பே ...

கழகத்தின் தொடக்கக் காலங்களில் ஒரு விதி வலியுறுத்தப்பட்டது. அதாவது, வெளிமாவட்டத்தைச் சேர்ந்த தி.மு.க. தலைவர்கள் சென்னையில் குடியேறியபோது, அவர்கள் எல்லாம் தத்தமது சொந்த மாவட்டத்தில் இருந்துதான் பொதுக்குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. அது சிறிது காலம் கடைப்பிடிக்கப்பட்டாலும், நாளாவட்டத்தில் அது பின்பற்றப்படவில்லை. கழகத்தின் முக்கியத் தலைவர்கள் எல்லாம் இந்த விதிக்குள் பொருந்தினர். விதிக்குள் பொருந்தாதவர்கள் சென்னைவாசிகள் என்பது. சென்னைவாசிகளுக்குக் கிடைத்த நல்வாய்ப்பு. அந்த நல்வாய்ப்பில் உதயமானவர்தான் இளம்பரிதி.

கழகம் தொடங்கிய காலங்களில் சென்னையில் எந்தப் பக்கமும் கழகக் கொடி பறக்கத் தொடங்கியது தற்செயலானது அல்ல. புதிய அரசியல் எழுச்சிக்குக் காத்திருந்த இளைஞர்களின் ஏக்கமாக, கழகத்தின் தோற்றம் இருந்தது. திராவிடர் கழகப் பின்புலத்தில் இருந்து திராவிட முன்னேற்றக் கழகம் உருவாகி இருந்தாலும், அடித்தட்டு விளிம்புநிலை மக்கள் தங்களின் கட்சியாக வரித்துக் கொண்டது தி.மு.க. வைத்தான். அப்படியாகக் கட்சியை சென்னை மக்களிடம் கொண்டு சேர்த்ததில் முன்னிலையில் நின்றவர்தான் இளம்பரிதி. குறிப்பாக சென்னைவாழ் பூர்வக்குடி மக்கள், விளிம்புநிலை மக்களிடம் தங்களின் கட்சியாக கழகத்தைப் பார்க்க வைத்த உழைப்பு இளம்பரிதியின் துடிப்பு.

பூர்வீகம் சென்னைதான். திருவல்லிக்கேணித் தொகுதி. இன்றைக்கு கைலாசபுரம் என்று கூறப்படும் திருவல்லிக்கேணிக்கும் மயிலாப்பூருக்கும் இடைப்பட்ட பகுதியில் பிறந்தவர். அப்பா பெயர் ஆறுமுகம். சென்னையில் கிடைத்த கல்வியும், வாழ்க்கை அனுபவங்களும் திராவிட இயக்கக் கொள்கையில் பற்று கொண்ட இளைஞராக அவரை மாற்றியது. தொடர்ச்சியாக கழகம் தொடங்கப்பட்டபோது, அதன் ஆரம்பக் கால முன்னணி வீரராக இருந்தார்.

## மாவட்டக் கழகமும் நடவடிக்கையும்

கழகம் தொடங்கிய காலகட்டங்களில் சென்னையில் 50 வட்டக் கழகங்களே இருந்தன. ஒரே மாவட்டக் கழகமாக இருந்தது. அந்த மாவட்டக் கழகத்தின் செயலாளராக இருந்தவர் இளம்பரிதி. மாவட்டச் செயலாளர் என்கிற பெரும்பொறுப்பில் இருந்தாலும் தொண்டர் என்கிற நிலையில் இருந்து கழகத்தில் களப்பணிகளில் இறங்கி வேலை செய்பவராக இருந்தவர் இளம்பரிதி.

பின்னாட்களில் ‘திராவிடச் சுடர்’ எனப் பெயர்பெற்ற இவர், தொடக்கக் காலங்களில் முரட்டுத் தொண்டர் என்றால், யாரும் நம்ப மாட்டார்கள். கழகச் செயல்பாடுகளுக்கு ஓர் இடையூறு எனில், தலைமைக் கழகத்தின் வழிகாட்டுதல்களுக்கோ, அனுமதிக்கோ காத்திருக்க மாட்டார் என்பார்கள். இதனால் 1956-ஆம் ஆண்டு இறுதி முதல் 1959-ஆம் ஆண்டு இறுதி வரை மூன்று ஆண்டுக் காலத்துக்குத் தலைமைக் கழகம் இவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

அப்போதும் உறுப்பினராகத் தொடர்ந்தாலும், கழக மேடைகளில் ஏறக்கூடாது என்ற போது உரிமைக் குரல் கொடுத்துள்ளார். இவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட பிறகுதான், துணை மாவட்டச் செயலாளராக இருந்த கோ.செங்குட்டுவன் சென்னை மாவட்டச் செயலாளராகப் பொறுப்பினைக் கவனிக்கத் தொடங்கினார் என ‘தி.மு.க. வரலாறு’ நூலில் குறிப்பிடுகிறார் க.திருநாவுக்கரசு.

## திருவிழாக் கூட்டம்

சென்னைத் தமிழில் இவர் ஆற்றும் உரையைக் கேட்பதற்காகவே மக்கள் திருவிழா போல கூடுவார்கள் என்று குறிப்பிடுகின்றனர் சென்னை கழகத்தினர். எத்தனை மணி நேரம் என்றாலும், ஆற்றொழுக்காகப் பேசும் ஆற்றல் கொண்டவராக இருந்தார். அவரது நகைச்சுவை ததும்பிய பேச்சுக்கு கழகத்தினரும் சொக்கு வார்கள். அப்போதெல்லாம் அரசியல் பொதுக்கூட்டங்களுக்கு நள்ளிரவு ஒரு மணி, இரண்டு மணி வரை அனுமதி உண்டு என்பதால் அவர் பேச்சைக் கேட்டுவிட்டு திருவிழாக் கூட்டம்போல மக்கள் திரும்புவார்கள் என்கின்றனர், அவர் உரையைக் கேட்டு ரசித்த கழகத்தினர்.

அவரது உரை பேரறிஞர், கலைஞர் உட்பட அனைவருக்கும் பிடித்தமானது. ஏனென்றால், சென்னைத் தமிழில் உரையாற்றும் ஆற்றல் அவருக்கு மிகப்பெரிய பலமாக இருந்தது. பின்னாட் களில் தமிழ்நாடு முழுவதும் தலைமைக் கழகச் சொற்பொழி வாளராகச் சுற்றி வந்துள்ளார்.

சென்னை மாவட்டக் கழக மேடையில், ‘திருவாரூர் மு.கருணாநிதி உரையாற்றுவார்’ என முத்தமிழறிஞர் கலைஞரை சென்னைக்கு அழைத்து வந்து அவருக்காக திருவல்லிக்கேணிப் பகுதியில் கூட்டம் நடத்தி அறிமுகப்படுத்தி இருக்கிறார் என்கிற குறிப்புகளையும் பார்க்க முடிகிறது.

> **செயல் வீரர்களை சென்னையில் சந்து பொந்துகளில் அழைத்துச் சென்று ஆதரவு திரட்டியதில் இளம்பரிதி புயல்போல இருந்தார்.**

மிசா காலத்துக் கொடுமை காரணமாக, இவரது உயிராக இருந்த கழக மேடைகளில் இவரால் நின்று பேச முடியாத நிலை ஏற்பட்டது. கழக மேடைகளில் அமர்ந்தபடியே பேசுவது பழக்கமானது. அப்போதும் சைக்கிள் ரிக்ஷாவில் திருவொற்றியூர் முதல், செங்கல்பட்டு வரை செல்லும் பழக்கத்தை நிறுத்தியவரில்லை.

## மாநகராட்சித் தேர்தலில் புயல்

1959-ஆம் ஆண்டில், சென்னை மாநகராட்சித் தேர்தலை எதிர்கொள்ள கழகத்தின் வெற்றிக்குப் பொறுப்பாளராக இருந்தவர் தலைவர் கலைஞர். பேரறிஞர் அண்ணா எதிர்பார்த்ததற்கும் மேல் வெற்றியைப் பதிவுசெய்து, மாநகராட்சியைக் கழகத்தின் வசம் கொண்டுவந்தார் கலைஞர். அப்போது பிரச்சாரப் பணிகளில் கழகத் தலைவர்கள் குவிந்து வேலை செய்தாலும், தன்மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகள் குறித்து, எந்த வருத்தமும் இல்லாமல் கழகச் செயல் வீரர்களை சென்னையில் சந்து பொந்துகளில் அழைத்துச் சென்று ஆதரவு திரட்டியதில் இளம்பரிதி புயல்போல இருந்தார்.

தேர்தல்களில், போட்டியிட வாய்ப்புக் கிடைக்கவில்லை என்றாலும், கழகத்தின் வெற்றியே அவரின் மகிழ்ச்சியாக இருந்தது. சளைக்காத அவரின் கொள்கை முழக்கத்தினை, சட்ட மேலவை உறுப்பினராக்கி அங்கு ஒலிக்க வைத்தார் கலைஞர். கழகத்தின் மீதும், கலைஞர் மீதும் கொண்டிருக்கும் பற்றும் அன்பும், அவர் ஆட்சியில் இல்லாத காலத்திலும் காட்டுவதுதான் தொண்டர்களின் நாடித் துடிப்பாக இருக்கும். இளம்பரிதியும் அந்தப் பற்றினைக் கொண்டிருந்தார்.

## இருக்கும் வரையும், இறக்கும் வரையும் கழகம்

அவரை எம்.ஜி.ஆர் பக்கம் இழுக்கவேண்டும் என எத்தனையோ அன்பர்கள் அழைப்பு விடுத்தும், அவரைத் தேடி வந்த வண்ணம் இருப்பார்களாம். சென்னையில் அவருக்கு இருந்த செல்வாக்கை மடைமாற்ற வேண்டும், கழக அணிகளுக்குள் பிளவு ஏற்படுத்த வேண்டும் என்பது அப்போது ஏற்படுத்திக் கொண்ட திட்டம். ஆனால், வந்தவர்களுக்கு தேநீர் கொடுத்து உபசரித்து, கலைஞரின் புகழைப் பாடி, இருக்கும் வரை கழகம், இறக்கும் வரை கழகம் என உறுதியாகக் கூறி வழி அனுப்பி வைத்திருக்கிறார்.

கழகப் பற்று கொண்டோரைக் கை விட்டவரில்லை கலைஞர். அதை இளம்பரிதியும் அறிவார். அவரின் இளவல் இளம்வழுதி அரசியலுக்கு வந்த காலத்தில் 1984-ஆம் ஆண்டில் வாய்ப்பு வழங்கி, சட்டமன்றத்துக்கு அனுப்பி வைத்தவர் கலைஞர். அதன் பின்னர் உடல்நலம் ஒத்துழைக்காமல் களப்பணிகளைக் குறைத்துக் கொண்ட இளம்பரிதி, 1995-ஆம் ஆண்டு ஏப்ரல் 10-ஆம் தேதி தனது உடலியக்கத்தை நிறுத்திக் கொண்டார்.

சென்னை மாநகரத்தை, கழகத்தின் கோட்டையாகக் களம் அமைத்துக் கொடுத்த அந்த முன்னணித் தொண்டரின் இறுதி ஊர்வலம் கழகக் கொடி உயர உண்மைத் தொண்டர்களுக்கு உரமூட்டும் நிகழ்வாக அமைந்தது. அந்த உழைப்பு, கழக வரலாற்றில் என்றும் எழுதப்பட்டிருக்கும்.

**...துடிக்கும்**

## ஆசியப் போட்டிகளும் உலகக் கோப்பையும்!

‘கோவிட்’ பெருந்தொற்று காரணமாகத் தள்ளிப்போன, 2022-ஆம் ஆண்டுக்கான 19-வது ஆசியப் போட்டிகள் கடந்த செப்டம்பர் 23 முதல் சீனாவின் ஹாங்ஜோ நகரில் நடைபெற்று வருகின்றன. அக்டோபர் 8-ஆம் தேதி நிறைவடையும் இந்த விளையாட்டுப் போட்டிகளில், வரலாறு காணாத அளவில் இந்தியா 80க்கும் மேற்பட்ட பதக்கங்களுடன், பதக்கப் பட்டியலில் நான்காவது இடத்தில் உள்ளது. எப்போதும் போல தடகள விளையாட்டுக்களில்தான் நம் வீரர்கள், அதிக பதக்கங்களைக் குவித்துள்ளனர். இந்த விளையாட்டுப் போட்டிகளுக்கு முன்னால் வீரர்களின் ஜாதகங்களைப் பார்த்தது, மல்யூத்த வீரர்களின் கோரிக்கையைக் கண்டுகொள்ளாதது என ஒன்றிய பா.ஜ.க. அரசு கொடுத்த குடைச்சல்கள் அனைத்தையும் தாண்டி, நம் வீரர்கள் இந்தச் சாதனையைச் செய்திருக்கிறார்கள்.

ஒரு பக்கம் இந்தியாவின் இந்தப் புதிய சாதனையை வியப்புடன் உலகம் பார்க்க, இன்னொருப் பக்கம் அக்டோபர் 5-ஆம் தேதி இந்தியாவில் தொடங்கிய உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகளை ஏளனமாகப் பார்க்கிறது. வரலாறு காணாத அளவில், படுமோசமான விளம்பரங்கள், குறைவான அளவே கூட்டம், பாகிஸ்தான் உள்ளிட்ட வெளிநாட்டு வீரர்களுக்கு உணவு வழங்கும் தேர்வில் குழப்பம், இந்திய வீரர்களுக்கு ‘காவி நிற ஜெர்ஸி’ எனப் பல குளறுபடிகளுடன் சொதப்பலாகத் தொடங்கியிருக்கிறது உலகக் கோப்பை!

## :ப்ளாஷ்பேக்



### கலைஞரின் நூல்களால் பெருமை!

1998-ஆம் ஆண்டில், **‘கலைஞரின் சாதனைக் களஞ்சியம்’** என்கிற தகவல் திரட்டை நூலாகக் கொண்டு வந்தோம். அதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் அளிப்பதற்காக, கோபாலபுரம் இல்லத்துக்கு என் மனைவி கௌமாரீஸ்வரியுடன் சென்றிருந்தேன். அவர் படியிலிருந்து இறங்கி வந்த நேரத்தில் நூலினைக் கொடுத்துவிட்டு, சற்றுத் தள்ளி நின்றோம். நூலினை வாங்கிப் பார்த்தவர், நான் ஓரமாக இருந்ததால் அருகில் அழைத்து விசாரித்தார். அந்த நேரத்தில் புகைப்படக் கலைஞர் யோகா எடுத்த படம் இது. அதன்பின்னர் அய்யா சின்னக்குத்தூசி அவர்களின் அறிமுகத்தின் மூலம் 2003-ஆம் ஆண்டில் தலைவரின் **‘கவிதை மழை’** நூலினை வெளியிடும் வாய்ப்பு அமைந்தது. நமது முதலமைச்சர் அவர்களின் மூலம் **‘கலைஞரின் கடிதங்கள்’** நூலினைக் கொண்டு வந்தது எங்களுக்குக் கிடைத்த பெருமையாகக் கருதுகிறேன்.



ராஜசேகரன்

**-கௌரா.ராஜசேகரன்,**
**சீதை பதிப்பகம், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### அறிஞரும் கலைஞரும்

**1969-ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா மறைவுக்குப் பின்னர் அவரின் பிறந்த நாள் விழாவின் போது ‘தென்னாட்டு படேல்’ அறிஞர் அண்ணா என்கிற போஸ்டர்கள் சென்னை நகரம் முழுவதும் ஒட்டப் பட்டன. 1956-ஆம் ஆண்டு திருச்சி மாநாட்டுக்குப் பின்னர் பெயருடன் அடைமொழி சேர்த்து, போஸ்டர் அடிப்பது சகஜமாக இருந்தது. அவற்றில் நீண்ட காலமாக இருந்து வந்ததும், சிறப்பு அடைமொழியாக நிலைபெற்றுவிட்டதும் அறிஞர், கலைஞர் ஆகியவை.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 262




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131